ஞாயிறு வெளியீடு. விலை 0-1-3. REGD. No. M. 4642.

திராவிட நாடு

மலர் 3. | 25-2-45 | இதழ் 48.

விதவைக்கொரு செய்தி

"வாணிதாசன்"

ஆணிறந்தால் பெண்மற்றோ ராள டைவதற்கு
வீண்வாதம் பேசி விதிர்விதிர்ப்பார்—நாணமின்றிப்
பெண்ணிழந்தோன் வேறுமணம் பெற்றிடுதல் நீதியென்பார்,
எண்ணி லிவரேதற்கு ஈடு?

உன்சோட்டுப் பெண்களெல்லாம் உற்ற துணையோடு
இன்புற்று வாழுகின்றார் இவ்வுலகில்—என்கிளியே!
ஆணுக் கொருநீதி ஆக்கியதா லுன்வாழ்வை
வீணாய்க் கழிப்பதுவோ விள்!

உன்தகப்பன் தங்கை உடன்பிறந்தான் வாழ்க்கைதனில்
இன்னிணையில் சேர்ந்தே யிருக்கின்றார்—உன்மனது
"கைம்பெண்நீ வேண்டாம் களிப்புறுமோ" சற்றுநினை
நம்முரிமை நாடுவது நாம்.

மஞ்சள் குளித்து மலர்சூடிப் பொட்டிட்டுக்
கஞ்சவிழி தீட்டிக் களிப்படைய—வஞ்சி
துடிதுடித்தா லாமோ துணிந்தெடுநீ இன்றே
மடமை இனமழிக்கும் வாள்.

எதிர்ப்பட்டால் குற்றமும் ஏழை விதவைக்
கதிர்பட்டால் குற்றமும் காண்பார்—மிதித்துலகை
மீன்போ லெதிர்த்தேறு மீளும் வகையிதுதான்
ஏன்தயக்கம் இன்னே எழு!

தற்காலப் பிரச்சினை

பெரியார்

"தம் மனதில் உண்மையென்று படக்கூடிய விஷயங்களைச் சமய சந்தர்ப்பம், தயா தாட்சண்யம் முதலியவற்றைப் பார்க்காமல் மிகவும் தைரியமாக எடுத்துச் சொல்லுபவர் பெரியார் ஈ. வே. ரா. அவருடைய பிரசங்கம் எவ்வளவு தெளிந்த நடையோடும் உணர்ச்சியூட்டக் கூடியதாகவும் இருக்கிறதோ, அதேபோல அவருடைய கட்டுரையும் அமைந்திருப்பதைக் காணலாம். ஜாதி சமயப் பிரிவினைகளைவேரறுத்து, ஒவ்வொருவனும் தன்மதிப்போடு தானும் மனிதன் என்று தலைநிமிர்ந்து நடக்க இக் கட்டுரைவழிகாட்டட்டும்!" (பி.வி.)

தற்காலப் பிரச்சினை, திராவிட மக்கள், இந்துக்கள் என்னும் தலைப்புக்கொண்ட கூட்டத்திற்குள் இருப்பதா அல்லது அதைவிட்டு விலகி வெளிவந்து, தங்கள் இனம், நாடு, இன நலன், நாட்டு நலன் தெரியும்படியான தலைப்புடையவர்களாகி அன்னிய ஆதிக்கத்திலும் சுரண்டலிலும் இருந்து விடுபடுவதா என்பதேயாகும்.

உண்மையாகச் சொல்லுகிறேன், திராவிட மக்கள் இன்று தங்கள் முற்போக்குக்கும், விடுதலைக்குமாக முதலில் கவனிக்கவேண்டியது தங்கள் நாட்டினுடையவும், இனத்தினுடையவும் ஆன பிரச்சினையே ஒழிய, அரசியல் பிரச்சினை அல்ல. நமக்கு இன்னும் அரசியல் பிரச்சினையைப்பற்றிப் பேசும்படியான தகுதி ஏற்படவில்லை. ஆரியர்களைப்போலவோ முஸ்லீம்களைப்போலவோ நமக்குள் அரசியல் பிரச்சினைக்கேற்ற ஒற்றுமையும், தகுதியும், திட்டமும் இன்றுவரை இல்லவே இல்லை.

ஆரியர்களுடைய அரசியல் பிரச்சினை ஆரிய ஆதிக்கமுள்ள இந்து சட்டப்படி, மனுமாந்தாதா, இராமன் கொள்கைப்படி ராஜ்ஜியபாரம் நடைபெறவேண்டியதேயாகும். மற்றப்படிநாட்டைஎவன் ஆண்டாலும்அவர்களுக்குஅக்கறையில்லை. தங்கள் இஷ்டப்படி, தங்கள் நலனுக்கு ஏற்றவண்ணம் எவன் ஆட்சி நடத்துகிறானோ அவனை இருத்திவைப்பதும் மற்றவனை ஒழித்து விடுவதுமே அவர்களுடைய புராண காலம் முதற்கொண்டு நடந்துவந்த கொள்கையாகும். இராமயணக்கதை இந்த நீதியைப் புகட்டுவதேயாகும். இந்துதேசசரித்திரமும் இதைப் பெரிதும் மெய்ப்பிக்கும். இதற்கேற்ற ஒற்றுமையும், ஒன்றுபட்ட உணர்ச்சியும், கட்டுப்பாடும் அவர்களிடம் உண்டு. ஆதலால் இன்றைய நிலையில் பிரிட்டிஷார் கூட அல்லாமல் ஜப்பானியரோ, ஜர்மானியரோ—ஏன் அராபியரோ, ஆப்பிரிக்கரோ இந்நாட்டைக் கைப்பற்றிவிட்ட போதிலும்கூட, அவர்களிடம் தங்கள் நலனுக்குக்கேடில்லாமல் (ஆரியமதத்தில் பிரவேசிப்பதில்லை என்பதாக) நடப்பதாக வாக்குறுதி வாங்கிக்கொள்ளுவார்கள். அல்லது அப்படிவாக்குறுதி கொடுக்காதவனையோ, கொடுத்த வாக்குறுதியைத் தவறுபவனையோ விரட்டிவிட்டு வேறொருவனை அழைத்துவந்து வாக்குறுதி வாங்கிக்கொண்டு ஆட்சியில் அமரவைப்பார்கள். இந்தச்சக்தி அவர்களுக்கும், அதுவே கொள்கையாக அவர்கள் மதத்திற்கும், அதற்குத்திட்டமாக அவர்களது புராண இதிகாசக்கதைகளுக்கும் இருக்கின்றன.

அதுபோலவேமுஸ்லீம்களுக்குள்பெரிதும், பாக்கிஸ்தான் பிரச்சினை இந்துமத ஆட்சியை விட்டு மீண்டுகொள்ளுவதும், தங்கள் இஸ்லாம் கொள்கைக்கு ஏற்ற ஆட்சியே நடைபெறவேண்டும் என்பதுமாகும். அதற்கேற்ற மதமே அவர்களது மதமுமாகும். அதற்குத்தகுந்த ஒற்றுமையும் கட்டுப்பாடும் அவர்களிடம் உண்டு.

ஆனால் திராவிடர்களுக்கு அதுபோல் என்ன இருக்கிறது? திராவிடர்களுக்கு வடநாட்டில் 100க்கு 5 பேருக்குக்கூடத் தாங்கள் திராவிடர்கள் என்றோ தங்கள் நாடு திராவிட நாடு என்றோ தெரியாது. தென்னாட்டவர்களை வடநாட்டார் தங்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றோ, தங்கள்நாட்டைச்சேர்ந்தவர்கள் என்றோ கருதுகிறவர்கள் வெகு வெகுஅருமையேயாகும்.

தென்னாட்டவர்களில் தானாகட்டும், திராவிடர்களில் தாங்கள் திராவிடர்கள் என்றும், தங்கள் நாடு திராவிடநாடு என்றும், தங்கள் நாட்டில் ஆரியசமயமும், ஆரிய புராண இதிகாச காவியங்களும் வந்துதங்கள் நிலையைக்குலைத்து, தங்களை ஆரிய அடிமைகளாகவும், முஸ்லீம்களாகவும் கிறிஸ்தவர்களாகவும். கீழான ஜாதியாராகவும், தீண்டாதாராகவும் செய்துவிட்டதாக (திராவிடர்களில்) எத்தனை பேருக்குத்தெரியும்? இந்த நிலையில் திராவிடர்கள் தங்களுக்கு அரசியல்கொள்கையாகவோ திட்டமாகவோ எதைக்கருத முடியும்? முதலாவது திராவிடர்களிடையில் ஆரியர்கள் போலவோ முஸ்லீம்கள் போலவோ சமுதாயத்திலும், சமயத்திலும் ஒன்றுபட்ட உணர்ச்சியும், தாங்கள் யாவரும் ஒன்றேயென்ற ஒற்றுமையும் குறித்துக்காட்டக்காரியத்திற்குத்தொண்டாற்றக் கட்டுப்பாடும் இருப்பதாகயாராவதுகூறமுடியுமா? ஆரியர்கள்போலவோ, முஸ்லீம்கள் கிருஸ்த்தவர்கள் ஆகியவர்கள் போலவோ திராவிடர்களுக்கு ஒரு பொதுஸ்தாபனம் எங்கேயிருக்கிறது? ஆரியர்களுக்குஆரியதர்ம சபை, முஸ்லீம்களுக்கு முஸ்லீம்லீக், கிருஸ்தவர்களுக்கு கிருஸ்தவர்கள் சங்கம் (கிருஸ்டியன் அஸோசியேஷன்) இருக்கின்றன.

திராவிடர்களுக்கோ என்றால் அந்தந்த ஜாதியின்பேரால், அதாவது விஸ்வப்பிராமணர் சங்கம், அக்கினிகுல க்ஷத்திரியர் சங்கம், வன்னியகுல க்ஷத்திரியர் சங்கம், நகரத்துவைசிய சங்கம், தொண்டை மண்டல வேளாளர் சங்கம், கார்காத்த வேளாளர் சங்கம், கொங்கு வேளாளர் சங்கம், முக்குலத்தார் சங்கம், நாடார் மகாஜன சங்கம், செங்குந்தர் சங்கம், பேரிசெட்டியார் சங்கம், 24 மனைவைசியர் சங்கம், ஆரியவைசிய சங்கம், நாயுடு சங்கம், பலிஜ நாயுடு சங்கம், கம்ம நாயுடு சங்கம், வெலம நாயுடு சங்கம், காபு நாயுடு சங்கம், கொல்ல நாயுடு சங்கம், நாயர் சமாஜம், தீயர்யோகம், புலையர் சங்கம், (இன்னும் பல கூறலாம்.) இப்படியாகச் சின்னாபின்னப்பட்டுப், பலஜாதிகளும்தங்களைப்பல இனங்களாகக்கருதிக்கொண்டு, ஒருவருக்கொருவர் கொடுக்கல் வாங்கல் இல்லாமலும், உண்பன தின்பன தண்ணீர் குடித்தல் முதலியவைகள் கூடத் தடுக்கப்பட்டுக் கட்டுக்குலைந்து நெல்லிக்காய் மூட்டையை அவிழ்த்துக்கொட்டியதுபோல்தனித்தனியாய் இருக்கிறோம்.

இதனால்தான் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் சமீபத்தில் சென்னைக்கு வந்திருந்தபோது,

"இன்றைய நிலையில் நமக்குச் சுயராஜ்ஜியம் வந்தால் இன்றைய ஆட்சிபோல ஆளும் ஜாதியார்தான் ஆளுவார்களே தவிர நம்போன்ற அடிமைஜாதியார் அடிமைகளாகவே, ஆளப்படுபவர்களாகவே தான் இருப்போம். ஆதலால்சுயராஜ்ஜிய ஆட்சி இன்றைய ஆட்சியைவிட மேலானதாக இருக்கமுடியாது." என்று சொன்னார். அதாவது ஒற்றுமையும், கட்டுப்பாடும் உள்ளஜாதிதான் எந்தச் சுயராஜ்ஜியத்திலும் ஆட்சிபுரியும் என்றும், அதில்லாதமக்கள் எப்படிப்பட்ட சுதந்திர ராஜ்ஜியத்திலும் ஆளப்படும் அடிமை ஜாதியாகத்தான் இருக்கவேண்டியதாகும் என்றும் அருமையாகச் சொன்னார்.

இந்த நிலையில் சென்னை மகாணத்தில் உள்ள 4 கோடிக்கு மேற்பட்ட திராவிட மக்களது பிரச்சினை அரசியலைப்பற்றியதா, நாடு சமயம் சமுதாயத்தைப் பற்றியதா என்று சிந்திக்கவேண்டுகிறேன்.

ஆகவே, நாம் வடநாட்டை விட்டுப் பிரியாவிட்டால் நமக்கு நாட்டுணர்ச்சி எப்படிஉண்டாகும்? அதுபோலவே நாம் ஆரியசமயப் பிடியிலிருந்து விலகாவிட்

(11ம் பக்கம் பார்க்க)

தொடர் கதை,

★

சௌமியன்.

பார்வதி பி. ஏ;

கதை கற்பனையே, கதையில்வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவனவல்ல.

எதிர்பாராதது நிகழ்ந்தது; எவ்வளவோ ஆச்சரியகரமான சம்பவங்களைக் கண்டு, பழக்கப்பட்டிருந்த பிரமநாயகம் பிரமித்துப்போனார். பார்த்திபன், ஒரு கொள்ளைக்கூட்டத்தைத் தயாரித்திருக்கிறான், கள்ளநோட்டுகள் வெளியிடுகிறான், காமக்கூத்துக் கழகம் வைத்திருக்கிறான் என்றெல்லாம் கேள்விப்பட்டிருந்தால் அவர் அதிசயப்படமாட்டார். சுரங்கத்திலே சுறு சுறுப்புடன் ஆயுதங்கள் செய்து குவிக்கப்படுவது கண்டபோது கொஞ்சம் ஆச்சரியமடைந்தார், என்றபோதிலும், இந்த ஆயுதச்சாலையின் மூலவராக ஒரு ஜப்பானியன் இருப்பான் என்று, பிரமநாயகம் எதிர்பார்க்கவே இல்லை.

ஜப்பானியன், மிகவும்மரியாதையுடன் நடந்துகொண்டான். தமிழகத்திலேயே பிறந்து வளர்ந்தவன்போல, வணக்கம் செலுத்தினான். பற்களெல்லாம்வெளியே தெரியும்படி சிரித்தான். ஆயிரவரை, ஜப்பானியனுக்குக் காட்டி, "நம்து புனிதப் படைக்குப் புது ஆட்கள்!" என்று பெருமையுடன் கூறினான். "பார்த்திபா! உன் அறிவும்ஆற்றலும், ஆயிரம்என்ன? ஆயிரம் ஆயிரம்பேரைக்கூட நமதுபுனிதப்படைக்குக்கொண்டுவரக்கூடியதுதான். உன், திறமைக்கும் புத்திக்கூர்மைக்கும், ஏற்றபடியான நிலைமை விரைவிலே கிடைக்கும். இது ஆண்டவன் தீர்ப்பு. நான்கேவலம், அந்தத்தீர்ப்பைத் தெரிவிக்கும்தேவதூதன்." என்று கூறிவிட்டு, ஆயிரவரை அன்புடன் பார்த்து, "அன்பர்களே! புனிதப்படை வீரர்களே! உங்களை நான் வரவேற்கிறேன். உங்கள்போல் இன்னும்பலரும் வரவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். உங்களுக்கு நான் தலைவனல்ல, தாசன். புனிதப்படைக்குத்தலைவன்தேவன், மானிடர் எவரும்அல்ல! இதைமுதலிலே தெரிந்துகொள்ளுங்கள். நான் தேவனால் இங்கு அனுப்பப்பட்டவன், எதற்கு? இந்தப்பாரதகண்டத்தைப் பரங்கிகளிடமிருந்து, விடுவித்துப், பரிபாலனத்தைஉமது தேசமக்களிடம் கொடுக்க. ஆசியாக்கண்டத்திலே அநாதிகாலந்தொட்டு, ஆண்டவனுடைய ஆசீர்வாத பலத்தால், ஜொலித்துக்கொண்டிருந்த பாரதகண்டம் இன்று க்ஷீணித்துவிட்டது இந்தத்தேசத்துச்செல்வம், சீமைக்குப்போய்விட்டது. இது உங்கள் காந்தி சொன்னதுதான். இப்படி இம்சையை அனுபவித்துக்கொண்டிருக்கும் இந்தியாவை விடுதலை பெறச்செய்யும்நோக்கமே இப்புனிதப்படைக்கு. இதிலேசேர்ந்துள்ள நீங்கள், நவபாரதவீரர்கள், இந்துஸ்தானத் தீரர்கள்! உங்களை நான் பாராட்டுகிறேன்" என்று வாழ்த்தினான். பார்த்திபனுடைய சதியாலோசனையைக்கண்டறியவந்த இடத்திலே, ஜப்பானியச் சதியே வெளியாவதுகண்ட் பிரமநாயகத்தின் மனம் படபடவென அடித்துக்கொண்டது. பார்த்திபன்ஊரை ஏய்த்து வந்தான். ஜப்பானியனோ இவனையே ஏய்த்துவைத்திருக்கிறான் என்று யூகித்த பிரமநாயகம், ஜப்பானியனின் நோக்கம் என்னவென்பதைத் தெரிந்து கொள்ள ஒரு தந்திரம் செய்தான்.

"ஐயா! என் சந்தேகம் போக்கவேண்டும். தங்கள் நாடு விடுதலை பெறவேண்டும். அதற்காக நாங்கள் எவ்விதமான தியாகம் செய்யவும் தயார். ஆனால், அது எப்படி நடக்கும்? பீரங்கியும் வெடிகுண்டும் வைத்துக்கொண்டிருக்கும், வெள்ளைக்காரனை வெறுங்கையுடையநாங்கள் என்ன செய்யமுடியும்? இங்கே கொஞ்சம் ஆயுதம் இருக்கிறது, ஆயிரம்பேர் இருக்கிறோம் என்றாலும், இது, பிரிட்டிஷ் சாம்ராஜ்ய பலத்தைத் தாக்கப் போதுமா? எனக்குத் தைரியம் இல்லை" என்று கூறினார். ஜப்பானியன் சிரித்துவிட்டு, "புத்திசாலி நீ. ஆனால் சந்தேகி! புனிதப்படைக்குத் தேவையான ஆயுதம் இங்கே இருக்கிறது, பாரதநாட்டுக்குஇது போதாது என்பது எனக்கும் தெரியும். ஆனால் நான் என் தேவனைத் துதித்தால் அவர் வானத்திலிருந்து ஆயுதத்தை அமோகமாகப்பொழிவார். காலம்வரும், அக்காட்சியைக்காண்பாய்" என்று கூறினான். இந்தப்பேச்சைக்கேட்டுக்கொண்டு நின்ற குமாருக்குக் கொஞ்சம் திகைப்பு உண்டாயிற்று. அவனுடைய முகத்திலே சீற்றமும் தோன்றிற்று. பார்த்திபனை நோக்கி, "முதலாளித்தனத்தை முறியடிக்கவே முகாம் அமைக்கிறோம் என்று ஆரம்பத்திலிருந்துஇன்றுவரையில்சொல்லிவந்தீரே, இப்போது, பாரதகண்டவிடுதலை என்று வேறு பாஷையிலே பேசுகிறீரே, இதுஎன்ன?" என்றுகேட்டான்.

"தம்பியின் தீட்சணியம், கொஞ்சம் மட்டுப்படவேண்டும். பார்த்திபா! நமது வேலையின் மிகமுக்கியமான கட்டம் இப்போது. இந்தச் சமயத்திலே, இப்படிப்பட்ட இலட்சியவாதிகளைக் கொஞ்சம் கட்டுக்காவலிலேவைத்திருக்கவேண்டும்" என்றான் ஜப்பானியன்.

"விபரீதமான வாதம் செய்கிறீரே! இலட்சியவாதியையா அடக்கவேண்டும்! பேஷ்! இந்த இருட்டு உலகிலேஇவ்வளவு காலம் அடைபட்டு, மாடுபோல்உழைத்து, மக்கள் சுற்றத்தை மறந்து குற்றவாளி போல வெளி உலகிலே தலைகாட்டாது நான் பாடுபடுவது, எதற்கு? இலட்சிய வாதியை அடக்கிவைக்கவேண்டும் என்ற இறுமாப்பான பேச்சைக்காதிலே கேட்பதற்கா? இலட்சியவாதியிடம் நடந்துகொள்ளவேண்டிய முறையேதெரியாதா உமக்கு?' என்று ஜப்பானியனை நோக்கி ஆத்திரத்துடன் கேட்டான். அவன், புன்சிரிப்புடன், கண்களைச் சிமிட்டிக்கொண்டே, "இலட்சியவாதியைத் தட்டிக்கொடுத்துவேலையிலேஈடுபடவைக்கவேண்டும். வேலை ஆரம்பமானதும், இலட்சியவாதியைக்காரியவாதி கட்டுப்படுத்துவான். இதுதான் வேலை முறை. போகப் போகத்தெரியும்," என்று கூறிவிட்டுப் பார்த்திபனை அழைத்துக்கொண்டு தன் விடுதிக்குப்போனான். பிரமநாயகம், குமாரின் உதவியை எந்தச் சமயத்திலும் பெற முடியும் என்ற தைரியம் அடைந்தார். நிலைமையையும் தெரிந்துகொண்டார். குமார், சமதர்ம ஆட்சியை எப்படியாவது நிறுவவேண்டும் என்ற ஆவல்கொண்டான். புரட்சிப்படை தயாரித்து, அந்தப் புதுமுறையைக்கொண்டு வரலாம் என்று குமாருக்குப் பார்த்திபன் ஆசையூட்டினான். இலட்சிய வெறிபிடித்த குமார், பார்த்திபனுடைய உள் எண்ணம்என்னவென்பதைத் தெரிந்துகொள்ள முடியவில்லை, பார்த்திபன் சிலம்புக்கு ஏற்றவிதத்திலே ஆடினான். பார்த்திபன், இலட்சியவாதியாகிய குமாரை, இருட்டு உலகிலேஒரு பாசறை அமைக்கச் செய்தான். இடையே ஜப்பானியனுடன் இரகசிய ஏற்பாடு நடைபெற்றது. புரட்சிப்படை புனிதப்படையாக மாறிற்று! சமதர்ம ஆட்சியை உண்டாக்கும் போர்க்குமாருக ஜப்பானியனுடைய கையாளாக வேண்டிய போக்குவரலாயிற்று. இது குமாருக்குக் கொஞ்சமும் இஷ்டமில்லை, இந்த நிலைமையை எந்த நேரத்திலும் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை பிரமநாயகத்துக்கு ஏற்பட்டதும், முதலிலே தோன்றிய திகைப்பும் திகிலும் போய்விட்டது, தெளிவாக விஷயத்தைத் தெரிந்து கொண்டார், காரியத்தை வெற்றிகரமாக முடித்துவிடலாம் என்று தீர்மானித்து, குமாரின் வாயைக்கிளறத் தொடங்கினார்.

"ஆஹா! நமது நாட்டுக்கு நல்லகாலம் தொடங்கிவிட்டது. விடுதலை வரப்போகிறது. அடிமைத்தனம் ஒழியப்போகிறது!" என்று பிரமநாயகம், பரவசமாகிவிட்டவர்போலக் கூவினார், அவருடைய தோளைப்பிடித்துக் குலுக்கிக் குமார், "முட்

(4-ம் பக்கம் பார்க்க.)

பார்வதி பி.ஏ.,

3-ம் பக்கத் தொடர்ச்சி.

டாளே! அந்தக் குள்ளனும் கள்ளனும் கூறினதுகேட்டு ஏமாந்த சோணகிரியாகி விட்டாயா? அந்தப்பாவிகள் என்னை நம்பவைத்து மோசம் செய்திருக்கிறார்கள். உனக்குத் தெரியாது அவர்கள்சூது. நீ இங்கே இன்றுதானேவந்தாய், இளித்தவாயனே! இங்கே இவர்கள் ஏற்பாடு செய்யும் அக்ரமம் உனக்குத் தெரியவில்லையா?" என்று பதை பதைத்துக்கேட்டான்.

"நீ யார்? புனிதப்படையின் தளபதி போல நடிக்கிறாய், ஆனால் உன் போக்கும் பேச்சும், உன்னை ஒரு பிரிட்டிஷ் ஏஜண்ட் என்று காட்டுகிறது" என்று பிரமநாயகம் கேட்டார், கோபப்பாவனையில்.

"நானா பிரிட்டிஷ் ஏஜண்ட்? பைத்யக்காரா! நான் யாருக்கும் கையாளல்ல. கயவர் பேச்சைக்கேட்டுககொண்டு,புத்தியைக்கெடுத்துக்கொள்ளாதே. என் பேச்சைக்கேள். நான் விரும்புவது சமதர்மம்! அதற்காகவே இந்த இருட்டு உலகிலே, எவ்வளவோ கஷ்டங்களைப்பொறுத்துக்கொண்டு வாழ்ந்துவருகிறேன். சமதர்ம ஆட்சிக்குப்புரட்சி நடத்துவதாகக்கூறின பார்த்திபன், இப்போது ஜப்பானியனுடன், கூடிக்கொண்டு, ஏதோ ஓர் சதியாலோசனை செய்கிறான். எனக்குக் கொஞ்சங்கூடப்பிடிக்கவில்லை. வெறுப்பாகவும் பயமாகவும் இருக்கிறது. நீ இந்த இடத்துக்குப் புதியவன். நீ யோசனை செய்து பார்" என்று கூறினான்.

"யோசனை என்? நாட்டு விடுதலைக்கு வழிகிடைக்கும் என்று தெரிகிறது.இந்த நேரத்தில் மேனம் மிதுனம் பார்க்கலாமோ!காற்றுள்ளபோதேதூற்றிக்கொள்ள வேண்டாமா? வெள்ளைக்காரர்களை விரட்ட வழி கிடைக்கிறதுஎன்றஉடனே எனக்கு ஆனந்தம் அளவுகடந்து உண்டாகிறது" என்று மிக்க ஆர்வத்தோடு பிரமநாயகம் பேசினார்.

"அடடா! அந்தப்பாவிகள்எந்தஉணர்ச்சியைக் கிளப்பி விடவேண்டும் என்று கருதினார்களோ அதுதானே நடக்கிறது. ஐயா! தேசபக்திகொண்டவரே! இந்தத் தேசத்தை விடுவிக்க வேண்டும் என்ற ஆசை எனக்கும் உண்டு. உனக்குமட்டுந்தான் என்று எண்ணிவிடாதே, ஆனால் அந்த விடுதலையை ஜப்பானியன் வன் வாங்கித்தருகிறேன் என்று கூறினான். அவனை நம்பலாமா? அவன், தேசவிடுதலை வாங்கித்தருகிறேன் என்று ஆசைமொழிகூறி, நம்மைத்தூண்டிவிட்டுக்,கலகத்தைநடத்திப்பிறகு, இங்கு ஜப்பானிய சாம்ராஜ்யத்தை ஏற்படுத்தவே தந்திரமாக வேலை செய்கிறான், இது தெரியவில்லையா?" என்று குமார் கூறிவிட்டு, ஜப்பானியரின் நாடுபிடிக்கும்வெறிபற்றி விளக்கலானான். பிரமநாயகம், கடைசி வரையில், குமாரின் வாதத்தை ஏற்க மறுத்துவிட்டார். ஜப்பானியரின் நல்லெண்ணத்தைப்பற்றிச் சந்தேகிக்க முடியாது என்று தீர்மானமாகக் கூறிவிட்டார். கோபங்கொண்ட குமார், வாதிட்டான், வற்புறுத்தினான், உபமான உபமேயங்களோடு பேசிப்பார்த்தான்,உலகநிலைமைபற்றி உருக்கமாகஉரைத்தான்,எதற்கும், பிரமநாயகம் ஏதாவது மறுப்புரைத்துக்கொண்டே இருக்கக்கண்டு, குமார் மேலும் கோபங்கொண்டு, "உன்னிடம், மரமண்டைக்காரனான உன்னிடம் பேசுவதில் பயனில்லை! நீ கூலி!ஜப்பானியன் எலும்புத்துண்டு போட்டால் வாலைக்குழைக்கும் வர்க்கத்தான். உன்னிடம்பேசிக்காலத்தை வீணாக்குவானேன்! நான் இந்தப்பாசறை அமைக்கப் பாடுபட்டவன். பல ஆயிரம் ரூபாய் தொழிலாளர் நிதியாகக் கிடைத்ததை இதிலேகொட்டியிருக்கிறேன். இராத்தூக்கம் பகல்தூக்கமின்றிப் பாடுபட்டிருக்கிறேன். எனக்கில்லாதஉரிமை, இந்தப் பார்த்திபனுக்கு ஏது? ஜப்பானியனுடன் கூடிச்சதிசெய்வதை நான் நேரிலேயே கண்டித்துவிடப் போகிறேன், தலை போவதானாலும் சரி" என்று கூறிவிட்டு, ஆவேசம் கொண்டவன்போல, ஜப்பானியன் தங்கியிருந்த இடத்துக்குச் சென்றான். அதேசமயத்திலே, ஜப்பானியன், பார்த்திபனுக்கு, இந்தியா, பர்மா, மலாய் பகுதிகள்பொறிக்கப்பட்டிருந்த பூகோளப் படத்தைக் காட்டி, ஜப்பானியருடைய போர்த்திட்டங்களை விளக்கிக்கொண்டிருந்தான், "பார்த்திபா, யுத்தம் ஆரம்பமானதும் பசிபிக்கடலை, எங்கள் கடற்படை கலக்கிவிடும், சிங்கப்பூர் சிதறும், ரங்கூன் நாசமாகும், பர்மா பிடிபடும், பிறகு........" என்று கூறிவிட்டுப் புன்சிரிப்புடன்பார்த்திபனைப் பார்த்தான்.

"பிறகு.........?" என்று பார்த்திபன் கேட்டான். "பிறகா? ஒரே பாய்ச்சல் அரக்கானிலிருந்து கிளம்பினால் கல்கத்தா! கல்கத்தாவிலிருந்து ஒரு படை டெல்லி! மற்றொருபடை சென்னை! இன்னொருபடை பம்பாய்! பார்த்திபா! அமெரிக்கா, பிரிட்டன் இரண்டும் மதயானைகள்! அவைகளை அடக்கும் அங்குசம் டோக்கியோவிலே தயாராகஇருக்கிறது" என்று ஜப்பானியன் கூறினான் களிப்புடன்.

"ஜப்பானிய சாம்ராஜ்யத்தின் வீரதீரம் இருக்கட்டும், நமது ஒப்பந்தம் ஜப்பானிய சர்க்காரால் ஒப்புக்கொள்ளப்படுமா? என்பது தெரியவேண்டுமே! மலேயாவை வீழ்த்துவோம், பசிபிக் கடலைக்குடிப்போம், பர்மாவைப் பிடிப்போம், என்று கூறிக்கொண்டேபோனால், போதுமா? நமது ஒப்பந்தம்என்ன ஆகும்? அதைக்கூறும்!" என்று கேட்டான் பார்த்திபன்.

"இதிலே என்ன சந்தேகம்! பர்மாவிலே, ஜப்பானியர் பிரவேசித்ததும், இந்தியா விடுதலை அடையும்" என்றான் ஜப்பானியன்.

"விடுதலை கிடக்கட்டும்! என் நிலை! அதுபற்றி மௌனம் சாதிக்கிறீரே" என்று பார்த்திபன் கேட்டான், ஜப்பானியன் சிரித்துவிட்டு, "ஓ! அதுவா! மறந்து விடவில்லையே! ஜப்பானிய சாம்ராஜ்யத்தின் நேசரான உமக்குத்தான், தமிழ்நாட்டு ஆட்சி உரிமை! நீரே இங்கு கவர்னர்! இதுதான் உம்மிடம் செய்துகொண்டஒப்பந்தம். டோக்கியோ இதனை ஏற்றுக்கொண்டுவிட்டது" டோக்கியோ, நமது ஒப்பந்தத்தை அங்கீகரித்துவிட்டதல்லவா! பேஷ்! இனி உமது திட்டத்தைக்கூறும், இம்மியளவும் கெடாதபடி நான் பார்த்துக்கொள்கிறேன்" என்று கூறினான்.

ஜப்பானியன் பார்த்திபனை நோக்கி, "நமது திட்டம் மிகச்சுலபமானது. ஜப்பானியப்படைகள் பர்மாவிலே புகுந்ததும், இங்கே நமது திட்டம் ஆரம்பிக்கப்படவேண்டும். காங்கிரஸ் இயக்கத்தின் மூலம் நாட்டிலே மூட்டப்பட்டிருக்கும் அதிருப்தியை ஜப்பான் சாதகமாக்கிக்கொள்ளும், பர்மா வேலை முடிந்ததும், இங்கு நாம், வெள்ளைக்காரருக்குவிரோதமான ஒரு இயக்கத்தை ஆரம்பிக்கவேண்டும். நாமாக அவசரப்பட்டு ஆரம்பிக்கக்கூடவேண்டியதில்லை. காங்கிரஸ் இயக்கத்தார் ஏதாவது திட்டம் தயாரிப்பார்கள். காந்தியாருடைய மூளையிலே உதிக்கும் திட்டம்எதுவாகஇருப்பினும்அதனை டோக்கியோ, பயன்படுத்திக்கொள்ளும். காந்தியார்கூட எதிர்பார்க்க முடியாதபடி, டோக்கியோ அவருடைய திட்டத்தைஉபயோகிக்கும். அதேசமயத்திலே, நாமும், செயலில் ஈடுபடுவோம்" என்று ஜப்பானியன் கூறிவிட்டுக் கொஞ்சம் மெல்லியகுரலிலே, "பார்த்திபா! உடலுக்கு இரத்தக்குழாய்கள்போல நாட்டுக்குப்போக்குவரத்துச் சாதனங்களைக் கெடுத்தால்போதும், பிரிட்டிஷாரின் யுத்தமுயற்சிகெடும்" என்றுகூறிக்கொண்டிருக்கையில், ஜப்பானியன்துள்ளிஎழுந்தான், தன் காலிலே இருந்த பூட்சைக் கழற்றினான், காதருகேவைத்துக்கொண்டான், முகம் மலர்ந்தது,தலையை அசைத்தான், பார்த்திபன் முதுகைத் தட்டிக்கொடுத்துவிட்டு, "பேஷ்! முகூர்த்தவேளை நெருங்கிவிட்டது. பார்த்திபா! பெரிய துறைமுகத்தை எங்கள் படை பிடித்துவிட்டது!" என்று கூறிவிட்டு, பூட்சை மறுபடியும் காலில் அணிந்தபடி, இதிலே உள்ள இரகசிய ரேடியோ மூலம் செய்தி கிடைத்துவிட்டது. இனித்தாமதிக்கக்கூடாது. நம்மிடம் இருப்பவர்களிலே தைரியசாலிகளாகவும், நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாகவும் உள்

(10-ம் பக்கம் பார்க்க)

அறியாமைக்கு வித்திடுவதா?

ஈழத்தடிகள், பி.ஏ.,

'யார் தந்த பாலை நீ உண்டாய்?' என்று சம்பந்தரை நோக்கி அவர் தந்தையார் கேட்டதற்குத், தோடுடைய செவியன் என்ற பாடலால் சம்பந்தர் விடையளித்தார் என்பதும், தோடுடைய செவியன் என்பதற்குப் பொருள் என்னை என்பதும் முன்னர் விளக்கப்பட்டது. இனித், தோடுடைய செவியன் என்ற பாடலில்வரும் 'செவியன்' என்ற சொல்லுக்குச் சிவ அன்பர்கள் கூறும் இன்னொரு பொருளையும் அது குறித்த எமது விளக்கத்தையும் ஒரு சிறிது எழுதி மேற்செல்வாம்.

சம்பந்தர் பாடிய தோடுடைய செவியன் என்ற பாடலில் வரும் 'செவியன்' என்ற சொல்லை அந்தப் பாடலில் ஏன் அமைத்துப்பாடினார் என்று அந்தக்காலத்திலேயே யாரோ கேட்டிருப்பதாகத் தெரிகிறது. கேள்விக்கு விடையளிக்கும்முறையிலேயே சேக்கிழார்,

"...........தம்பாடல் பரமர்பால்
செல்லுமுறை பெறுவதற்குத்
திருச் செவியைச் சிறப்பித்து"

என்று கூறியுள்ளார். இத்தகைய ஒரு கேள்வி, அந்தக்காலத்தில் மட்டுமல்ல, எந்தக்காலத்திலும் ஓரளவுக்குப் பகுத்தறிவு பெற்றவர்களாலும் கேட்கப்படவேண்டியகேள்வியே யாகும். எப்படியென்றால், சம்பந்தரால் பாடப்பட்டதாகச் சொல்லப்படும் தேவாரம் சற்றேறக்குறைய 4224 பாடல்களாகும். இவற்றில் ஒன்றே தோடுடையசெவியன் என்பதும். இத் தோடுடைய செவியன் என்ற பாடலைச் சம்பந்தர் பாடியதற்கும், அப்பாட்டில் வரும் சில குறிப்பிட்ட சொற்களை என் அப்பாடலில் அமைத்துப்பாடினார் என்பதற்கும் கூறப்படும் காரணங்களைப் போல, மற்றைப் பாடல்களுக்கும் காரணங்கள் கூறப்பட்டிருந்தால், இந்தக் கேள்வியைக்கேட்க எவரும் முன் வந்திருக்கமாட்டார்கள். கேட்பதும் முறையாகாது. ஏதோ, அருள் மேலீட்டால் அன்பு கனிந்த நிலையில் அண்ணலையும் அவரைக் குறிக்கும் அடையாளங்களையும் அங்கங்கே அமைத்துப் பாடிவிட்டார் சம்பந்தர் என்று வாளா இருந்திருப்பர். ஆனால், தோடுடைய செவியன் என்ற பாடலில் வரும் சொற்களை மட்டும் எடுத்து, இந்தச் சொல் இந்த இடத்தில் இன்ன காரணத்திற்காக அமைக்கப்பட்டது, என்று விரிவுரை நிகழ்த்துவதும், அந்த இடத்தில் அந்தச் சொல்லை அழகாக அமைத்த அந்தணச் சிறுவனின் அருளும் அறிவும் அளக்கும் தன்மைத்தோ என்று அகம் நெகிழ்வதும்; இவ்வமைப்புக்களைப்பற்றி ஐயங் கொண்டோர் வினாக்கள் எழுப்பினால், அவர்கள்மீது சீற்றங்கொள்வதும் சிவ நேயர்களுக்குரிய சிறப்புரிமைகளாகவே இருந்து வருகின்றன. என்றாலும், காலநிலையும் அதற்கேற்பக் கருத்துரிமும் பெற்றுள்ள இன்றைய உலகம் இத்தகைய இடர்ப்பாடுகளுக்கு இலக்காகாமல் இருக்க வேண்டுமென்பதற்காகவே இவைபற்றி இயன்றளவு விளக்கம் கூறவேண்டியிருக்கிறது.

எனவே, சம்பந்தர் 'செவியன்' என்ற சொல்லை ஏன் அந்தப்பாடலில் அமைத்துப்பாடினார் என்பதற்குச் சேக்கிழார் கூறும் காரணத்தை உற்றுநோக்கும் போது; சிவன் இப்படிப்பட்டவர், அவருடைய இயல்பு இத்தன்மையது என்பனவற்றைச் சம்பந்தர் ஒரு சிறிதும் அறியாத நிலையில் நின்றே 'செவியன்' என்ற சொல்லை அப்பாட்டில் அமைத்துப்பாடியிருப்பதாகத் தெரிகிறது. சிவனையும் அவருடைய இயல்புகளையும் சம்பந்தர் அறிந்திருந்தால் அவர் 'செவியன்' என்ற சொல்லை அந்தப்பாடலில் அமைத்துப் பாடியிருக்கவே மாட்டார். தம்மால் பாடப்படும் பாடல் சிவனுடைய செவிக்கு எட்டவேண்டுமானால், அவருடைய செவியைச் சிறப்பித்துப் பாடுவதே முறையெனக்கருதி அங்ஙனம் பாடியிருக்கிறார். சிவனுடைய செவியைச் சிறப்பித்துப் பாடாவிட்டால் தம்முடைய பாடல்கள் சிவனால் ஒப்புக்கொள்ளப்படமாட்டா வென்பதையும் நன்கு முடிவு கட்டிய முறையில் உணர்ந்து பாடியிருப்பதாகவே தெரிகிறது. "சிவனைப்பாடவேண்டுமானால், அவருடைய செவியைச் சிறப்பித்துத்தான் பாட வேண்டுமா? செவியைச் சிறப்பியாவிட்டால் என்னுடைய பாடல்களைச் சிவன் செவிமடுக்கமாட்டாரா? கண்ணைச் சிறப்பித்துப் பாடாவிட்டால் கடைக்கண் நோக்கம் செய்யமாட்டாரா? நான் பசியால் அழுதபோது என்னுடைய அழுகையொலி சிவனுக்குக் கேட்டதே! கேட்டுவாளா இருந்தாரா? இல்லையே! அம்மையாரையும் உடன் அழைத்துக்கொண்டு என் அருகே வந்து எனக்கு அருளமுதம் ஊட்டினாரே! அப்படிப்பட்ட அன்புகலந்த அருள்வடிவ அண்ணலுக்கு, யான் பாடும் பாட்டுக்கேட்க வேண்டுமானால் அவருடைய செவியைச் சிறப்பித்துத்தான் பாடவேண்டுமா?" என்ற எண்ணமாவது சம்பந்தருக்கு ஏற்பட்டிருக்க வேண்டாமா? சிவனார் அளித்த அருளமுதம் உண்ட அளவிலேயே—அதே வினாடியிலேயே சம்பந்தர் எல்லாவிதமான அறிவையும் ஒருங்கே பெற்றுவிட்டார் என்று சேக்கிழாரே கூறுகின்றாரே!

"சிவனடியே சிந்திக்கும் திருப்
பெருகு சிவஞானம்,
பவமதனை அறமாற்றும் பாங்கினில்
ஓங்கிய ஞானம்,
உவமையிலாக் கலைஞானம் உணர்
வரிய மெய்ஞ்ஞானம்,
தவமுதல்வர் சம்பந்தர் தாமு
ணர்ந்தார் அந்நிலையில்"

என்பது சேக்கிழார், சம்பந்தர் பாலுண்ட அளவில் பெற்றது அல்லது அடைந்த நிலையைக்கூறும் உண்மையன்றோ! இது மட்டுமா?

"எப்பொருளும் ஆக்குவான் ஈசனே ஏ.........." என்பதையும் சம்பந்தர், பாலுண்ட அந்த நிலையில் உணர்ந்துவிட்டார் என்று பின்னும் சேக்கிழார் அவருடைய அறிவுடைமையைப்பெரிதும் வலியுறுத்திக் கூறியிருக்கிறாரே! இத்தகைய பேரறிவைப் பெற்ற பிரமபுரச் செம்மல் (சம்பந்தர்) சிவனுடைய இயல்பை அறியாமல், அவருடைய செவியைச்சிறப்பிப்பதன் வாயிலாகத் தம்முடைய பாடல்களைச் சிவனுக்கு எட்டும்படி செய்தார் என்பது எத்துணைவியப்பின்பாற்பட்டதாய் இருக்கிறது பாருங்கள் அன்பர்களே!

எல்லாவற்றையும் ஒருங்கே ஒருவினாடியிலேயே உணர்ந்த சம்பந்தருக்கு, "எங்கள்சிவன், வேண்டுதல்—வேண்டாமையில்லாதவர், விருப்பு—வெறுப்பில்லாதவர், தந்நலங்கருதாத—தனக்கென ஒன்று வேண்டாப்—பொதுநலப்பிரியர், தூய உடம்பினர்; இயற்கை உணர்வினர், முற்றும் உணர்பவர், பேரருள் உடையவர், முடிவற்ற ஆற்றலுடையவர், வரம்பில்லாத இன்பம் உடையவர், எதிலும் பற்றற்றவர், இப்படிப்பட்ட அரும்பெருங் குணங்களுடைய எங்கள் சிவன், 'என்னுடைய செவியைச் சிறப்பித்தாலன்றி உன்னுடைய பாடலைக்கேட்கமாட்டேன்' என்றுசொல்லுவாரா?" என்பதை உணரக்கூடிய அறிவு ஏன் உண்டாகவில்லை என்பதை எண்ணும்போது, எமக்கு ஒரு ஐயம் உண்டாகின்றது. அதாவது, மேலே சொல்லப்பட்ட இலக்கணங்கள் எல்லாம் உண்மையிலேயே சிவனுக்கு உரியவையாய் இருக்குமா? இருந்தால், எல்லாவற்றையும் ஒருங்குணர்ந்த சம்பந்தர் இவ்வுண்மையையும் உணர்ந்திருப்பாரன்றோ! அங்ஙனம் உணர்ந்தவரானால், செவி

(7-ம் பக்கம் பார்க்க)

சென்னையில்
சிவாஜி
கண்ட
இந்து ராஜ்யம்!
? ? ?

திராவிட நாடு.

காஞ்சி 25—2—45 ஞாயிறு

உணரவில்லையானால்...!

'நாம் பலவகையில் பிரிந்து பிளவுபட்டுக் கிடக்கிறோம். நமக்குள் ஒற்றுமை என்பதே கிடையாது. நமக்குள் ஒற்றுமை ஏற்பட்டாலன்றி, எந்தக் காரியத்திலும் வெற்றிபெற முடியாது' என்று நம்மவர்களிற் பலர் கூறுவதை நாம் கேட்டிருக்கிறோம். திராவிடர்களாகிய நாம் எந்தத்துறையிலும் பிற்போக்கே அடைந்திருக்கிறோம். இதற்குக்காரணம் என்ன? பிற்போக்கடைந்துள்ள ஒரு இனம் முன்னேற்றமடைவதற்குச் செய்யவேண்டிய காரியங்கள் எவை? அம்முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளவை யாவை? அவற்றிற்குப் பரிகாரமென்ன? என்பனவற்றை நாம்பல முறை விளக்கியிருக்கிறோம். ஆனால், ஏதோ ஒன்றை மனதில் வைத்துக்கொண்டு ஒற்றுமை வேண்டும் என்று மேற்பூச்சுப்பூசுவோர் எம் விளக்கங்களுக்குச் செவி சாய்த்தனரே யன்றி, அவற்றைக் கருத்தில் இருத்திக் காரியத்தில் வெற்றிபெற எம்முடன் ஒத்துழைக்க முன்வந்தார்களில்லை.

திருவாரூர் மாகாண மாநாட்டில், 'திராவிடர்களாகிய நாம் இந்துக்களல்ல' என்று கொண்டுவந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்குச் செவிசாய்த்து அதனை நிறைவேற்றுவதற்கு உறுதுணையாய் நின்று ஆதரித்தவர்களிற் பலர் இன்றும் தங்களை இந்துக்கள் என்றே நினைத்துக்கொண்டிருப்பதும், தாங்கள் இந்துக்களே என்பதைக்காட்டிக்கொள்ளும் முறையில் தங்கள் குடும்பங்களில் இந்து மதாசாரங்களைப் பின்பற்றிக்காரியங்களைநடத்திக்கொண்டிருப்பதையும் நாம் பார்க்கிறோம். இப்படிப்பட்டவர்கள்தான்'நமக்குள் ஒற்றுமையில்லை, அது உண்டாகவேண்டும்' என்று வெளிவேஷம் போடுகிறார்கள். உள்ளொன்று வைத்துப்புறம்பொன்று பேசும் இவர்களின் போக்கைக் கண்டுதான், 'தென் இந்திய நல உரிமைச் சங்கம்' என்றிருந்த நம் கட்சிக்குத் 'திராவிடர்கழகம்'என்று பெயரிட்டு, அத்தீர்மானத்தையும் சேலத்தில் கூடிய மாகாணமாநாட்டில் நிறைவேற்றி வைக்கப்பட்டது. தென்இந்திய நலஉரிமைச் சங்கம் என்பதில் வரும் 'இந்தியா' என்ற சொல்லை நாம்ஒப்புக்கொண்டால், நாம் இந்துக்கள் என்பதையும்ஒப்புக்கொண்டாக வேண்டுமே என்று சிலர் கருதக்கூடும்என்பதற்காகவே, நாம் இந்துக்களுமல்ல, இந்தியர்களுமல்ல; நாம் திராவிடர்—திராவிட நாட்டவர் என்பதை வலியுறுத்தித் திருவாரூர் மாகாண மாநாட்டுத் தீர்மானத்துக்கு அரண் செய்யவும், இன்னும் திராவிடர்களிற்சிலர் தங்களை இந்துக்கள்என்று நினைத்துக்கொண்டிருக்கும் நினைப்பைமாற்றவுமே இப்பெயர்மாற்றம் செய்யப்பட்டதென்பதைச் சிலர் இன்னும் உணராமல் இருப்பதும், கட்சியின் பெயருக்காகக்கங்கணம் கட்டி நிற்பதும் பெரிதும் பரிதாபத்திற்குரிய விஷயங்களாகும். ஒரு கட்சியின் அமைப்பை ஏற்றுக்கொண்டவர்கள்,ஒரு காரியத்தைச் செய்யும்போது முன்பின் யோசனையின்றிச் செய்வார்களா? அக்காரியங்களுக்குத் தக்க காரணங்கள் இருக்காதா? என்பதைக்கூட ஆர அமர இருந்துயோசித்துப்பாராமல், தங்கள் காட்டுக்கூச்சலைக் கடை வீதிக்குக்கொண்டு வருவது பின்னும் பரிதாபத்திற்குரிய விஷயமாகும். எனவே, நமக்குள் இருக்கும் பிரிவையும் பிளவையும் நீக்கி ஒற்றுமையை உண்டாக்கவே திருவாரூரும் சேலமும் வழிகாட்டிற்று என்பதை இனிமேலாவது அவர்கள் உணரவேண்டும்; உணரவில்லையானால் அல்லதுஉணரவிருப்பம் இல்லையானால், இனி அண்மையில் கூடவிருக்கும் மாகாண மாநாடாவது அவர்களுக்கு நல்ல தெளிவை உண்டாக்கும் என்று நம்புகிறோம்.

சென்னை

திராவிடர் மாநாடு

எப்ரல் 1-ந்தேதி சென்னை செயின்ட் மேரிமண்டபத்தில் சென்னை மாவட்டத் திராவிடர் மாநாடு திருச்சினாப்பள்ளி, தோழர் என். சங்கரன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

தமிழ் வளர

8-ம் பக்கத் தொடர்ச்சி.

துறவிகளை யானறிவேன்.போலித்துறவு ஒழிக. 'ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்ல' என்று ஊர்வெளிச்சம் போடும் போலித்துறவு ஒழிக. நமது சமூகம்கெடுவதற்கு இப்போலித் துறவிகளே காரணர். ஆணும் பெண்ணும் கூடிவாழ்வதே இயற்கை இயற்கைக்கு மாறாக மனிதன் பெண்ணைத் துறக்கிறான், இயற்கைக்கு மாறுபட்டவன் இரகசியத்தில் தீச்செயல் புரிவான் என்பதில் ஐயமில்லை.

பண்டிதர்களைப் பற்றிச்சிறிது கூறுகிறேன். பண்டிதர்கள் இன்னும் அந்தப் பழைய குட்டையிலேயே ஊறிக்கிடத்தலாகாது. பழைய உரையாசிரியர் கூறிய வழியே சென்று கொண்டிருத்தலாகாது. உலகத்தையும் விழித்துப் பார்த்தல்வேண்டும். உலகப்போக்கிற் கேற்பப் பழையன கழித்துப்புதியன கொள்ளல் வேண்டும்.

பண்டிதர் நிலைபற்றிக் கூறவேண்டியதில்லை. இவ்வளவு கிளர்ச்சிக்குப் பிறகும் இன்னமும் பண்டிதர்கள் உரிய மதிப்புக் கொடுக்கப்படுகிறார்கள் இல்லை.

பண்டிதர்கள் பெண் இழிவு, துறவு, நிலையாமை ஆகியவற்றையே கூறும் பிற்கால சிற்றிலக்கியங்களையே பெரிதும் போதிக்கிறார்கள். அவற்றைத் தள்ளிச் சங்க இலக்கியங்களை மக்களுக்குப்புகட்டுதல் வேண்டும். பண்டிதர் இன்னல்கள் ஓராயிரமிருக்கின்றன.எனினும் அவற்றை மறத்தற் பொருட்டு ஒவ்வொருவரும் நாள்தோறும் ஒருமணி நேரம் சங்கஇலக்கியங்களைப் பாடஞ் சொல்வார்களாக. இதுதான் தமிழ்த்தொண்டு. ஓர் ஊரில் நான்கு பண்டிதர்கள் இருந்தால் தினம் ஒருவர் ஒன்றைப்பற்றிக் கூறலாம்.

நடனமும் இசையும்

3-3-45 சனிக்கிழமை மாலை 6-மணிக்கு
சென்னை கோகலே மண்டபத்தில்
பெரியார் ஈ. வே. இராமசாமி
தலைமையில்
பேபி ரஷ்யா — நடனக்கச்சேரியும்,
அகில இந்திய நாதசுர வித்வான்
T.N.இராசரத்தினம்பிள்ளை அவர்கள்சீடர்
கோவை K. S. முத்தையா பாகவதர்
பார்ட்டியாரின்
இன்னிசையும் நடைபெறும்.
டிக்கட்:- ரூ. 5, 3, 2, 1, அணா 8,
"சென்னை இராயபுரம் 2வது வட்டம் திராவிடர் கழக நிதி சேமிப்பிற்காக."

பிறப்பு

கொரநாடு திராவிடர்கழக உறுப்பினர் எஸ்.ரெத்தினம்வாழ்க்கைத்துணைவி ராசம்மாளுக்கு 23—10—44ல் பெண் மகவு பிறந்தது தாயும் சேயும்சுகம்.

அறியாமைக்கு

5-ம் பக்கத் தொடர்ச்சி.

யைச் சிறிப்பித்தாலன்றித் தம்முடைய பாடலைச் சிவன் கேட்கமாட்டார் என்று எண்ணிச் செவியைச் சிறிப்பித்துப்பாடியிருப்பாரா? எதிலும் பற்றற்றவர் சிவன் என்பதை நம்பி அவரை வழிபட்ட சம்பந்தருக்குச், சிவனாரின் செவியைச்சிறப்பித்துப்பாடவேண்டும், இல்லையேல் தம்முடைய பாடலைச் சிவன் கேட்கமாட்டார் என்ற எண்ணம் ஏன்—எப்படியுண்டாயிற்று என்று நாம்ஐயப்படுவதை எவரேனும் குற்றமென்று கூறமுடியுமா? ஒன்று, சிவனுக்குக் கூறப்படும் இலக்கணங்கள் பொய்யாய் இருத்தல் வேண்டும், அல்லது சம்பந்தர் சிவனையும் அவரது இலக்கணங்களையும் அறியாதவராய் இருத்தல் வேண்டும். இவ்விரண்டில் ஒன்றையாவது சிவ அன்பர்கள் பொய்யென்று ஒப்புக்கொண்டாலன்றி, அவர்களது சைவமும் அதன் கொள்கைகளும் நிலைத்திருக்க முடியாது. எனவே, இந்த இரண்டில் எதைப்பொய்என்பது? எதை மெய் என்பது? 'சிவ இலக்கணங்களைப்பொய் என்னல் ஆகுமோ? ஆகாது, ஆகாது! அவையே எங்கள் சமயத்தின் உயிர்நாடி. அவற்றைப்பொய் என்போமானால், அதோடு போச்சு எங்கள் சைவம்! பின்னர், சம்பந்தர் எல்லாம்உணர்ந்தவர் என்று கூறியதையே பொய் என்போமானால் அதோடுபோச்சு சைவத்தை விளக்கவந்த தேவாரமும், அதனைப்பாடிய அடியார்களின் பெருமையும், அப்பெருமையை விளக்கும் பெரியபுராணமும், என்ன செய்வது! இந்தப்பகுத்தறிவாளர் எங்களுக்குத் தரும் தொல்லையை எத்தனை காலத்துக்குத்தான் சமாளித்துக்கொள்வது? எத்தனை கேள்விகளுக்குத்தான் விடையளிக்க முடியாது விழிப்பது?" என்று விம்மி விதிர் விதிர்ப்புறும் சைவ அன்பர்களின் நிலையைக்கண்டு நாமும் உள்ளபடியே அவர்கள்பால்இரக்கங்கொள்ளுகிறோம். இனியேனும் திருந்தமாட்டார்களா என்ற நம்பிக்கையுடன் இதுபோன்றஆராய்ச்சிகளை எழுதியும்வருகின்றோம்.

ஆனால், நாம்எடுத்துக்காட்டும் ஆராய்ச்சிகளுக்கு நேரான மறுப்புத்தரும் தகுதியற்ற தம்பிமார் சிலர் தம் ஆராய்ச்சியை எம்முன் நீட்டி இதற்கென்ன விடையிறுப்பீர் என்று எக்காளமிடுகின்றனர். சிலநாட்களுக்கு முன் ஒரு தோழர் எனக்கொரு கடிதம் எழுதியிருந்தார். அதில், "மண்ணுளிப் பாம்புக்கு இருபக்கத்திலும் தலையிருப்பதுபோல் சிவனுக்கும் ஆண் தன்மையும் பெண் தன்மையும் ஒருங்கே அமைந்திருக்கிறது, இதில் என்ன தவறு?" என்று கேட்டிருக்கிறார். கேள்விகேட்ட அன்பர் மண்ணுளிப் பாம்பு ஒன்றைமட்டுமே பார்த்திருக்கிறார் போலும்! நாம் அதுபோன்ற உயிர்கள் பலவற்றைப்பார்த்திருக்கிறோம். ஒரு தலையும் எட்டுக்கால்களும் உள்ள மாட்டைப்பார்த்திருக்கிறோம். இரண்டுதலைகளும் நான்கு கால்களும்உள்ள ஆட்டைப் பார்த்திருக்கிறோம். ஒரு தலையும் ஆறு கால்களும் இரண்டு வாலும் இரண்டுபிட்டமும் உள்ள எருமையையும்பார்த்திருக்கிறோம். நேரத்துக்கொரு நிறமாக மாறும் பச்சோந்தியையும் பார்த்திருக்கிறோம். பறக்கும்விலங்கையும்பார்த்திருக்கிறோம். இன்னும் எத்தனையோ வியத்தகுவடிவங்களையெல்லாம் நாம் பார்த்திருக்கிறோம். ஆனால், தோடுடைய செவியனைப் போன்ற ஆணிற் பாதியும் பெண்ணிற் பாதியுமான ஒரு வடிவத்தை இதுவரை பார்த்ததேயில்லை, உயிரோடு. ஒரே வடிவத்தில் ஒரு பாதி பெண்ணும் பெண்ணிற்குரிய உறுப்படையாளங்களும், மறுபாதி ஆணும் ஆணுக்குரிய உறுப்படையாளங்களும்உள்ள ஒருவடிவத்தையாராவது பார்த்ததுண்டா? அப்படியொரு வடிவம் இயற்கை அமைப்பில் இருக்க முடியுமா? என்று நாம் கேட்டால், மண்ணுளிப்பாம்பை பார்த்ததுண்டாஎன்று பதட்டத்துடன் கேட்கிறார் அவர். மண்ணுளிப்பாம்பை மட்டுமல்ல, மக்களினத்திலேயே ஆணும் பெண்ணும் ஒன்றாக இணைக்கப்பட்ட ஒரு வடிவத்தை நாம் பார்த்திருக்கிறோம். கடந்த 25-ஆண்டுகளுக்கு முன் சீனா தேசத்திலிருந்து இருவர் வந்தனர், அவர்களில் ஒருவர் ஆண், ஒருவர் பெண். இவ்விருவரும் ஒரு தாய் வயற்றிலிருந்து ஒரே சமயத்தில் இரட்டைப் பிள்ளைகளாகப் பிறந்தவர்கள். தனித்தனியாகப் பிறக்கவில்லை. இருவர் உடலும் ஒன்றாக இணைக்கப்பட்டுப் பிறந்தவர்கள். அதாவது, இடுப்பிலிருந்து தோள்வரையில் இருவர் உடலும் ஒன்றாக இணைக்கப்பட்டிருந்தது. அந்த ஒரு இணைப்பைத் தவிர, ஏனைய உறுப்புக்கள் எல்லாம் ஆணுக்கும் பெண்ணுக்கும் அமைந்திருக்கவேண்டியமுறையிலேயேஅமைந்திருந்தன; இடுப்பிலிருந்து தோள்வரையிலுமுள்ளதோல் இரண்டு உடம்பையும் ஒன்றாகப் பிணைத்திருந்ததால், ஒருவரைவிட்டொருவர் தனித்திருக்கவோ, நடக்கவோ, படுக்கவோ முடியாமல் இருந்தது. மற்றும், உண்பதில்-பேசுவதில்-நினைப்பதில் எல்லாம் தனித்தனியாகவே இருந்தனர். இந்தப் பிணைப்புமுறை கருப்பையில் ஏற்பட்ட அமைப்பின் கோளாறேயாகும் என்றும், அப்பிணைப்பை அறுத்தால் அவ்விருவர் உயிருக்கும் கெடுதல் ஏற்பட்டு இறந்துவிடுவார்கள் என்றும் கைதேர்ந்த மருத்துவர் கூறிவிட்டதால் கடைசிவரை அவ்விருவரும் ஒன்றாகவே இருக்கநேர்ந்தது. ஆனால் இங்கு பேசப்படும் தோடுடைய செவியனுடைய உடல் அமைப்பு முறையைக்கருப்பையில் ஏற்பட்ட கோளாறு என்று சொன்னால் சைவ மெய்யன்பர்கள் சம்மதிப்பார்களா? பிறப்பிறப்பற்ற பெருந்தகைப் பிரானுக்குப்பிறப்புக்கூறுவதும், பின்னர் அப்பிறப்பில்குறைகூறுவதும் முறையா என்ற கேட்கமாட்டார்களா? என்பதைக் கேள்விகேட்ட அன்பர் எண்ணிப்பார்க்க வேண்டுகிறேன்.

இனித், தோடுடைய செவியனை மண்ணுளிப்பாம்புக்கு ஒப்பிட்ட அன்பர் தோடுடைய செவியனும் மண்ணுளிப் பாம்புபோல் முன்னும் பின்னுமாகத் தவ்வி தவ்வி நடப்பவராய் இருந்தாரா என்பதற்கும், மண்ணுளிப்பாம்பு என்ற உயிர் இனம் தலைமுறை தலைமுறையாக முன்னும் பின்னும் தவ்வித் தவ்வி நடக்கும் இயல்போடு பிறப்பதுபோல், தோடுடைய செவியன் என்ற ஒரு உயிர் இனமும் தலைமுறைதலைமுறையாக ஆணிற் பாதியும் பெண்ணிற் பாதியுமாகவே பிறக்கின்றனரா என்பதற்கும் தக்கவிடையிறுக்கவேண்டுகிறேன்.

தோடுடைய செவியன் என்பவரைச் சைவ அன்பர்கள் கடவுள் நிலையில்வைத்துப்பேசுகின்றனர். நம்மைக் கேள்வி கேட்ட அன்பர் அவரை மண்ணுளிப் பாம்பின் இனத்தில் வைத்துப்பேசுகிறார். நாம் கடவுளையும் அதன் அமைப்பு முறையையும் பற்றிப் பேசுகிறோம். அவர் மண்ணுளிப்பாம்பைக் கடவுளுக்குமேற்கோள் காட்டுகிறார். கடவுளும் மண்ணுளிப்பாம்பும் ஒன்றே என்பதை எடுத்துக்காட்டும் அன்பரின் சமத்துவப் போக்கை நாம் மறுக்கவில்லை. என்றாலும், கடவுளன்பர்கள் இதற்கு ஒத்துக்கொள்வார்களா என்பதே எமதுகேள்வியாகும்.

கடவுள் வேறு; அவருடையதன்மைகளும் வேறு; மற்ற உயிர்கள் வேறு, அவைகளின் தன்மையும் வேறு என்று கடவுளன்பர்கள் காரணங்கள் காட்டி, எல்லாவற்றையும்விடக் கடவுள் ஒருவரே எல்லாவகையிலும் உயர்ந்தவர்-சிறந்தவர் என்று கூறுவதை மறந்து, இப்படிப்பட்ட உயர்வும், சிறப்பும் உள்ள ஒரு கடவுள் இப்படியிருக்கலாமா? இருக்க முடியுமா? அகிலத்தைஎல்லாம்ஆட்டிப்படைக்கும் ஆண்டவன் ஆணிற்பாதியும் பெண்ணிற்பாதியுமாக ஏன் காட்சியளிக்கிறார்? ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ இருந்த கடவுளை, நீர் இப்படி இருக்க வேண்டாம், ஆணும் பெண்ணும் கலந்த வடிவமாக இரும் என்று யார்கேட்டுக்கொண்டார்கள்? அது அவருடைய இச்சையாயின், விருப்பு வெறுப்பு அற்ற கடவுளுக்கு அந்த இச்சை எப்படி உண்டாயிற்று? நினைப்பும் மறப்பும் அற்ற கடவுளுக்கு அந்த நினைப்பு எப்படி உண்டாயிற்று? பார்வதி யார்? பரமசிவன்யார்? பார்வதிக்குத் தந்தை மலையரசன் என்றால், பரமசிவனுக்கு யார் தந்தை? மலையரசன் பெற்ற மகளாகிய பார்வதியைப் பரமசிவன்திருமணம்செய்துகொண்டது உண்மையா? உண்மையானால், அத்திரும

(8ம் பக்கம் பார்க்க)

அறியாமைக்கு

(5-ம் பக்கத் தொடர்ச்சி.)

ணத்திற்கு முன் பரமசிவன் ஆணாகத் தான் இருந்திருக்க வேண்டும்! அப்படி யானால் அவருக்கு ஆணும் பெண்ணும் கலந்த வடிவம் எப்போது-எப்படி உண்டாயிற்று? பரமசிவனாவது பார்வதியைத் திருமணம் செய்துகொண்டதாவது, இதெல்லாம் பொய்-புராணக்கதையை நம்புவதா என்றால், புராணத்தில்தானே அர்த்தநாரீசுவர வடிவக்கதையும் கூறப் பட்டிருக்கிறது! புராணங்களில் எதை நம்புவது? புராணங்களில் கூறப்படாத ஆனால் எவராலும் மறுக்கமுடியாததுமான சிவ இலக்கணம் ஏதாவது இருந்தால் அதை நமக்கும் எடுத்துக்கூறி நம் பும்படி செய்யவேண்டாமா? சைவத்தின் திறவுகோலான தேவாரத்திலேயே, சிவனுக்கு, ஆணும் பெண்ணும் கலந்த ஒரு வடிவமும், ஆணும் பெண்ணும் கலவாத தனித்தனி வடிவங்களும் கூறப்பட்டிருப்பதோடு, பிள்ளையாரைப் பெற்றெடுப்பதற்காகச் சிவன் ஆண்யானை வடிவத்தையும், பார்வதி பெண்யானை வடிவத்தையும் எடுத்துப் புணர்ந்தார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறதே! இதில் எதை நம்புவது? புராணங்களை நம்பாமல் தேவாரத்தோடு மட்டும் நின்றுவிடலா மென்றாலோ, அதிலும், ஒரு பொருளைப் பற்றி ஒரு இடத்தில் ஒரு விதமாகவும்; அதே பொருளைப்பற்றி இன்னொருஇடத்தில் இன்னொருவிதமாகவும், மற்றோர் இடத்தில்மற்றோர்விதமாகவும்,பிறிதோர் இடத்தில் பிறிதோர் விதமாகவும் முன்னுக்குப்பின் முரணாகப் பேசப்பட்டிருக்கிறதே! இவற்றில்எதைநம்புவது?பிள்ளையாரைப் பரமசிவனே பெற்றெடுத்தார் என்பதற்குப் புராண இதிகாசங்களிலே பற்பலவிதமான கதைகள் கூறப்படுகின்றனவே! இதுபோலவே முருகனுடைய பிறப்பு முறையைப்பற்றிப் பற்பல கதைகள்பகரப்படுகின்றனவே! இவற்றில்எதை நம்புவது?

'பிள்ளையாராவது, அவரைப்பரமசிவன் பெற்றெடுத்ததாவது, அதெல்லாம் முழுப் பொய்! பிள்ளையார் என்ற ஒரு கடவுள் நமக்குக் கிடையவேகிடையாது. பிள்ளையார் என்பவர் வாதாபி என்ற ஊரிலிருந்து கொண்டுவந்து இறக்குமதி செய்யப்பட்டவரே யொழிய, அவர் நம்முடைய கடவுள் அல்ல' வென்று இருவகைச் சைவ ஆராய்ச்சியாளர் கூறுகின்றனரே! இது உண்மையா? இது போலவே, 'பரமசிவனின் இளையபிள்ளையாகிய முருகன் அல்லது சுப்பிரமணியர் என்ற கடவுளும் நமக்குரியவரல்ல, வடநாட்டிலே இருந்த கார்த்திகேயன் என்ற ஒரு மன்னன் தென்னாட்டுக்குவந்துபோர் செய்து வெற்றிகண்டு புகழோடு விளங்கினகாரணத்தால், அவன் கடவுள் நிலையில் வைத்து வணங்கப்பட்டானே தவிர, அவன் எங்கள் கடவுளாக மாட்டான்' என்று மலைபோன்ற குவியற்கணக்கான மறைகளை ஆராய்ந்த அடிகளார்போன்றோர்கூறுகின்றார்களே! இது உண்மையா?

இனி, இவர்களைப்பெற்றெடுத்த சிவனும் அவரது மைத்துனரான திருமாலும் எங்கள் கடவுளரல்ல, அவர்கள் வடநாட்டுக்கே உரியவர்கள், என்றும்கடவுட் பற்றுள்ள சில ஆராய்ச்சியாளர் இன்று கூறிவருகின்றனரே! இதுஉண்மையா? இவ்வாறெல்லாம் ஒன்றுக் கொன்று மாறுபட்டும், ஒருவர்கூற்றுக்கு இன்னொருவர்கூற்று முரணாகியும், கடவுளை நம்புபவர்களாலேயே கடவுளின் தன்மை இது, அவர் இப்படிப்பட்டவர் என்று விளக்கியுரைக்க முடியாத நிலைமையிலுள்ள ஒரு சமயத்தையும், அச்சமயத்தை விளக்கும் புராண இதிகாச தேவார சித்தாந்தங்களையும் நம்பி அவற்றிற்காக, அறிவை இழந்து அளவுகடந்த பொருளைப்பாழாக்கும் நம்மவரின் இரங்கத்தக்க நிலையைக்கண்டு இப்புராண இதிகாசப் புரட்டுக்களை ஆராய்ச்சி வாயிலாக வெளியிட்டுவரும் என்போன்றோருக்கு, மண்ணுணிப்பாம்பின் மகிமையை மகேசுவரனுக்கு ஒப்பிட்டுப்பேச முன் வந்த அன்பரின் நிலையைக்காண உள்ளபடியே அவர்பால் இரக்கமே உண்டாகின்றது. காரணம், அவர் ஒரு பல்கலைக் கழகமாணவர் என்று அறிந்ததால்.

இவ்விருபதாம் நூற்றாண்டு, மதப் போர்வையால் ஏற்பட்ட இருளில் மயங்கிக்கிடக்கும் பழுத்த வைதிகர்களையும் தனது பகுத்தறிவுச் சுடரால் தெளிய வைத்து, மதமபக்கத்தை மாற்றி மன்பதையின் மாணிக்கங்களாக ஆக்கிவருவதையும், 'புராணங்களே எங்கள் புகலிடம், இதிகாசங்களே எங்கள் இருப்பிடம், ஆகமங்களே எங்களுக்கு ஆதரவு, உபநிடதங்களே எங்களுக்கு உதவி, தேவாரமே எங்களுக்குத்தெம்பு, பிரபந்தமேஎங்கள் பேறு' என்று எண்ணி இறுமாந்திருந்தவர்களிற் பலரைப் பகுத்தறிவுலகிற்குச் செல்லும் பாதையைச் செப்பனிடும் சிற்பிகளாக ஆக்கி வருவதையும், நமக்கு ஓலைவிடுத்த நண்பர், நல்கலை பயிலும பல்கலைக்கழக மாணவர், தம் பயிற்சியின் வாயிலாக அறியாவிட்டாலும், தம்முடன் பழகுவோர் வாயிலாகவாவது அறியாமல் இருக்கமுடியாது. எனவே, அறிவில் வளர்ச்சியடைய விரும்புவோர், அதற்குத் துணை செய்யும் ஆராய்ச்சிகளை அலசிப் பார்க்கும்முறையைத் தவறென்று யாரும் கூறமாட்டார்கள். ஆனால், அறியாமைக்கு வித்திட விரும்புவோர்க்கு ஆராய்ச்சிகளை அலசுவதனல் யாதொரு பயனும் ஏற்படாது என்பதைத் அத்தகையினர் உணர வேண்டும்.

——————: (o) :——————

"தமிழ் வளர"

(இளந்தமிழன்)

இன்றைய தினம் நமது தமிழ்நாடு பல வழியிலும பாழ்பட்டுக் கிடக்கிறது; சிதறிக்கிடக்கிறது; ஒற்றுமையிழந்து நிற்கிறது; குழப்ப முற்றிருக்கிறது. இத்தமிழ் நாட்டை வளம்பெறச் செய்யவேண்டுவது தமிழர் கடமை; சிதறிக் கிடக்கும் தமிழ் நாட்டைச் சேர்க்கவேண்டுவது தமிழர் கடமை; ஒற்றுமையிழந்து நிற்கும் தமிழ்நாட்டைஒன்றுபடுத்த வேண்டுவது தமிழர் கடமை; குழப்பமுற்று இருக்கும் தமிழ் நாட்டை விளக்கமுறச் செய்ய வேண்டுவது தமிழர் கடமை.

தமிழன் தனது நெறியிற் பிறழ்ந்தான்; வீழ்ச்சி யடைந்தான். தமிழ் நாட்டிலே பெண் இழிவும் போலித்துறவும் புகுந்தன. தமிழர் நாசமுற்றனர். ஆகவே, பெண் இழிவும் போலித்துறவும் ஒழியுமாயின் தமிழர் ஓங்குவது திண்ணம். மனைவியொடுகூடி, மக்களொடு நிரம்பி மனையறங்காத்த தமிழன் பெண்ணைப் பேயென்றுநினைத்தான்; பேயானான்.

இளந்தமிழர்களே! கிளம்புங்கள்! போலித் துறவை இந்நாடுவிட்டு ஓட்டுங்கள்! "இவ்வுலகம் பொய்!" என்று தமிழனிடத்திலே வந்து காதிலே நிலையாமை ஓதுகிறது ஒரு கூட்டம்.

தமிழா! அதற்குச் செவி சாய்த்திடாதே! இவ்வுலகம் பொய்யா? நாம் வாழும் இடம் பொய்யா? நமது வீடு பொய்யா? தங்கப்பதுமை போலிருக்கிறாள் மனைவி! அவள் பொய்யா? அவள் மூலம் முருகனைப்போலே, சம்பந்தனைப் போலே, வள்ளியைப்போலே அழகான குழந்தைகள் பிறக்கின்றன. அவை பொய்யா? கள்ளங் கபடமற்ற நெஞ்சுடன் இறைபோலே நம்முடன் கொஞ்சி விளையாட வருகிறது குழந்தை! அதனைப் புறங்கையால் தள்ளுகிறான் மாபாவி! 'ஆ! மாயை! பந்தம்.' என்று இகழ்கிறான்! என்ன மடைமை! என்ன கல் நெஞ்சம்! இவனுக்கா துறக்கம் கிட்டும்? இவன் உலகைப் பொய்யென்று புகல்கின்றான்; ஆனால் அந்தப் பெண்ணினம் தரும் சோற்றை யுண்கிறானே! எல்லாவற்றையும் பொய்யென்று புகலும் இப்போலித் துறவி, தன்முன்னோர் வைத்தபணத்தை மாத்திரம் பொய்யென்று சொல்வதில்லை; அதற்காகக் கோர்ட்டில் வழக்காடுகிறான்; மகனென்றுகூடக் கருதாதும், சகோதரனென்று நினையாதும் பணத்தின் பொருட்டு மகனையும் மனைவியையும் பலஇன்னல்களுக்குள்ளாக்கிய பல போலித்

(6-ம் பக்கம் பார்க்க)

நெஞ்சு நெகிழ்ந்ததாம்!

விஜயலட்சுமி அம்மையாரின் தேசீயம், போகிறபோக்கு வேடிக்கையாக இருக்கிறது. வீரமும் ரசமும் கலந்து, அம்மையார், சொற்பொழிவுகள் நடத்துகிறார், அமெரிக்காவிலே. அம்மையாரின் நடைஅழகு, அமெரிக்கருக்கு அகமகிழ்ச்சி தருவதுபற்றி நமக்குக்கவலை இல்லை. அகமகிழ்ச்சியினால் அமெரிக்கர், தமது முதலாளித்திட்டத்துக்கு முழு ஆதரவு தருவார்கள் என்று பம்பாய் பணமூட்டைகள் மகிழ்வதாகக் கேள்வி. இருக்கலாம். விஜயலட்சுமியாரைத் தமது இஷ்ட தேவதையாக முதலாளிகள் கருதக்கூடும்! அது அவரவர்களுக்குள்ள தொடர்பைப் பொறுத்தது. சுந்தரமான மொழியிலே சுதந்திர கீதம்பாடும், விஜயலட்சுமி அம்மையார், அமெரிக்காவிலே, நமதுநாட்டுப் போர்வீரர்களைப் பழித்துப் பேசியிருக்கிறார்கள். இருபது இலட்சம் போர்வீரர்கள், எதிரிகளும் கண்டு வியக்கும் விதத்திலே வீரதீரத்துடன் போரிடும்தீரர்கள், ஐரோப்பிய களத்திலே அஞ்சா நெஞ்சுடன் வீரச்செயலாற்றிய சூரர்கள், அம்மையாரின் தேசீயத் திருவிழிகளுக்குக் கேவலம் "சோற்றுப்படை" யாகத்தென்படுகிறதாம்! இந்தியாவிலே 20-இலட்சம் போர்வீரர்கள் உள்ளனர், அவர்கள் வீரதீரத்திலே எந்த நாட்டவருக்கும் குறைந்தவர்களல்ல, நவீன யுத்தத்தை நடத்தக்கூடிய திறமைசாலிகள், ஜெர்மானியரைத்திணறடிக்கும் தீரர்கள் என்று, ராணுவநிபுணர்கள் கூறுகின்றனர். போர்க்களங்களிலிருந்து கிடைக்கும் செய்திகள் இதனையே விளக்குகின்றன! நம்போன்றவர்களின் கண்களின் முன், "நவயுகம்" உதிப்பதுபோலக் காட்சி தோன்றுகிறது நமது நாட்டு வீரர்களைக்காணும்போது. சுதந்திரத்துக்கு இலாயக்கில்லை என்று யார் இனி எங்களைக்கூறமுடியும், இதோ பாரீர் எமது வீரர்களை என்று மார்தட்டிக் கூறுகிறோம், பெருமிதத்துடன். ஆனால் அலகாபாத்திலே ஆனந்தபவனத்திலே தேசீயத்திலே ஆழ்ந்துகிடக்கும் அம்மையின் கண்களுக்கு, அந்தவீரர்கள், வெறும் சோற்றுப்பட்டாளமாகத் தெரிகிறதாம்! பசிக்கொடுமையினால் அத்தனைபேரும் பட்டாளத்திலே சேர்ந்தவர்கள், வீரர்களல்ல என்று கூறுகிறார், விஜயலட்சுமி அம்மையார்! எவ்வளவோ கஷ்டநஷ்டத்தை ஏற்றுக்கொண்டு, பயங்கரமான அனுபவங்களைத் தாண்டி, நாட்டுக்குப்பங்கம் ஏற்படாமல் நடந்துகொண்டு, உலகிலே நற்பெயரெடுத்த சிங்கங்கள், விஜயலட்சுமியாரின் விழிகளுக்குச் சோற்றுப்படையாகத் தெரிகிறதாம்! விபசாரிக்குக் கொண்டவன்தவிர மற்றவர், மன்மதனாகத் தெரிவாராம்! குடியனுக்குத்தான் தவிரப், பிறர் கால்பூமியிலே நிலைக்காது கூத்தாடுவதுபோலத் தெரியுமாம்! லோபிக்குத் தன்னைவிடத் தர்மவான் உலகிலே வேறுயாரும் இல்லை என்று தோன்றுமாம்! பித்தனோ, பிரபஞ்சமே பித்தம் பிடித்தலைகிறது என்று பிதற்றுவானாம். இவைகளைவிட விசித்திரமானதாக இருக்கிறது விஜயலட்சுமி அம்மையாரின் வாசகம். தாய்நாட்டுவீரர்களைச், சோற்றுப்படை என்று, கூச்சமின்றி அமெரிக்காவிலே கூறுகிறார்! அமெரிக்காவிலிருந்து இந்தியா வந்துபோன மேயோ ஊழல்களை வெளிப்படுத்தியதற்கு வெறியாட்டம் நடத்தினர் இங்கு. இதோ விஜயலட்சுமி அம்மையார், அமெரிக்கா சென்று, இந்தியாவைப்பற்றி இழிவாகப்பிறர் கருதும்படி பேசியிருக்கிறார், இங்குள்ள வீரர்கள் சோற்றுப்படை என்று, அமெரிக்காவிலே போஸ்ட்டன் என்றஇடத்திலே, பேசியிருக்கிறார், நாட்டின்மானம் பறிபோகும்படி! பட்டாளத்திலே உள்ளவர்கள், சம்பளம் பெறுகிறார்கள், ஆகவே அவர்கள் சோற்றுப்படை என்பது விஜயலட்சுமியாரின் வாதமா? யார் சம்பளம் பெறவில்லை? எந்தநாட்டுப்படைக்குத்தான் பணம் தரவில்லை! அமெரிக்க சோல்ஜர்கள், காசு பெறாது களம் வருகிறார்களா? எந்தக் காரணம்கொண்டு, இந்திய வீரர்களை இந்த அம்மையும் இழித்தும் பழித்தும் வெளிநாட்டவர் முன்னிலையில் பேசினார். நாட்டு மானத்தைக் காக்கும் வகைஅறியாத இந்த அம்மை ஏன் அமெரிக்கா சென்றார்! தங்களை, வெளிநாட்டார்முன்னிலையில் அவமதிப்பாகக், கேவலமாகப் பழித்துப்பேசியது தெரிந்தால்; படையிலே சேர்ந்து, பலகஷ்டங்களைப்பட்ட நமது வீரர்கள், விஜயலட்சுமியாரின் மொழியை என்னவென்று மதிப்பர்! எவனேனும் வெளிநாட்டான், இந்திய வீரர்களைப்பற்றி இழிவாகப் பேசினால், அவன் நாவைத் துண்டிக்கவேண்டும் என்று துடிக்கும் தேசீய வாலிபர்களே! நீங்களே கூறுங்கள், நமது நாட்டு வீரர்கள், ஏழைகளாகட்டும், இல்லாதகொடுமையினால் இம்சைப்பட்டவர்களாகஇருக்கட்டும், சோற்றுப்படைஎன்று அவர்களை ஒரு "தலைவி" அமெரிக்கர் முன்பு பேசலாமோ! இந்த அவமதிப்புக்காகவா, இருபது இலட்சம் வீரர்கள், களம்புகுந்தனர். அம்மையின் பேச்சைக்கேட்டதும் அமெரிக்கர், இந்நாட்டைப்பற்றி எவ்வளவு கேவலமாகப்பேசிக்கொண்டிருப்பர்! இந்தியா சோற்றுப்பட்டாளம் இருக்கும்ஊர் என்று கேவலமாகக்கருதி இருக்கமாட்டார்களா! இந்த நாட்டு அம்மையாரால் நமக்கு வெளிநாட்டிலேயும் அவமானம் விளையவேண்டுமா? யுத்தம்முடிந்து, சமாதான மாநாடு நடக்கும்போது, இந்தியாவைக்கேவலமாக நினைத்திடாதே! இந்த கிளம்பிய வீரர்கள் [illegible] ரான இட்லர் படையையும் நொருக்கிய வீரர் என்று நமது நாட்டுப்பிரதிநிதிமார் தட்டிப்பேசி, மாநிலமே மதித்திடும் அளவு மங்காத புகழ்பெற்ற வீரர்பெயர் கூறி, அதனை ஆதாரமாகக்காட்டி, சுயாட்சி கோருகிறபோது, விஜயலட்சுமி அம்மையாரின் வாசகம், "சோற்றுப் படை" என்ற பேச்சை, சமாதான மாநாட்டிலே இருக்கும் ஒருஅமெரிக்கர், நமது பிரதிநிதியின் முகத்திலே வீசி, "என்னய்யா பிரமாதப்படுத்துகிறீர்! இருபது இலட்சமென்ன இருநூறு இலட்சம் போர்வீரர்கள் வேலை செய்தனர் என்று வேண்டுமானாலும் மெச்சிக்கொள். யார்அவர்கள்? வீரத்திலகங்களா? வெட்டி ஆட்கள்! சோற்றுக்குத்திண்டாடியசொக்கன்கள்! பசிபோக்கிக்கொள்ள பட்டாளத்திலே புகுந்தவர்கள்! நான் கூறுகிறேன் என்று என்னை முறைத்தும் பார்க்காதே, உங்கள் தேச பக்த திலகம் விஜயலட்சுமி அம்மையார், அமெரிக்காவிலே போஸ்ட்டன் என்ற இடத்திலே 1945லே பிப்ரவரி 11லே, பேசியதைக் குறிப்பிடுகிறேன். இந்தச் சோற்றுப் படைக்காகக்கீர்த்திகொள்கிறாய், சும்மா கிட!" என்று சொன்னால், நமது பிரதிநிதி தலையைக் கவிழ்த்துக்கொள்ளாமல் வேறென்ன செய்யமுடியும். யோசித்துப் பாருங்கள்! இப்படி மானத்தை வாங்கும் மதிகெட்ட பேச்சை அம்மைசொல்லலாமா? இதுதான் தேசீயமா? தேசபக்திக்கு எடுத்துக்காட்டு, தேசமக்களை அயல்நாட்டிலே சென்று அவமதிப்பது தானா? அறிவுடைமையா இது? ஆர அமர யோசியுங்கள்! இதுதான் என்று இருந்துவிடாதீர், இன்னமும் இருக்கிறது, அம்மையின் திருவாக்கின் ரசம்! அமெரிக்கா சென்று இந்தியப்போர்வீரர்களை இகழ்ந்துபேசியதோடு அம்மையார் திருப்தி பெறவில்லை. அதே பேச்சிலேயே, அமெரிக்க சோல்ஜர்களையும் ஆபீசர்களையும், அன்போடு புகழ்ந்துமிருக்கிறார். அமெரிக்க சோல்ஜர்களும்ஆபீசர்களும், சொகுசுக்காரர்களாம்! அயலாரிடம் அன்புகாட்டுபவர்களாம்!! அவர்கள் தன்னைமிக அன்பாக நடத்தினார்களாம்! அந்த அன்பைக் கண்டு அம்மையின்நெஞ்சுநெகிழ்ந்ததாம்! நெகிழ்ந்து கண்ணீர்மல்கிப் பேசுகிறார், அமெரிக்க சோல்ஜர்களின், நற்குணம் பற்றி. அமெரிக்க சோல்ஜர்களின் அன்புகனிந்த போக்கு இருக்கிறதே, இது போன்ற முறைகளால்தான், ஒரு நாடு மற்றொரு நாட்டோடு அன்பால் பிணைக்கப்படுகிறதாம்! ஆகவே அம்மையாருக்கு இந்திய சோல்ஜர், சோற்றுப்படையாகவும் அமெரிக்க சோல்ஜர் சொகுசுள்ள தீரனாகவும் தெரிகிறது. சொந்த நாட்டுக்காரன் இழிவாகப்பேசப்பட்டு, அமெரி...

(10-ம் பக்கம் பார்க்க)

நெஞ்சு நெகிழ்ந்ததாம்!

[illegible]ம் பக்கத் தொடர்ச்சி.

கன் அம்மையின் பாராட்டுதலுக்கு உரியவனாகிறான். இந்திய சோல்ஜரைக்கண்டால் அம்மைக்கு வேம்பாக இருக்கிறது, தேனாக இனிக்கிறது அமெரிக்க சோல்ஜரின் குண விசேஷம், அம்மையாரின் அனுபவ ரசம் இப்படி இருக்கிறது. நாம் எதற்கென்று அழுவது, நம்நாட்டுத்தேவி நம் நாட்டு வீரர்களை பிறனுடைய நாட்டிலே போய் இழித்தும் பழித்தும் பேசுகிறார்களே, என்று அழுவதா! நம் நாட்டு நாரிமணி, அமெரிக்க சோல்ஜர்கள் ஆபீசர்கள் ஆகியோரின் அன்புகண்டு நெஞ்சு நெகிழ்கிறது என்று, சொந்த நாட்டுவீரர்களைக் கேலிபேசிய வாயாலேயே புகழ்ந்தார்களே அதனை எண்ணிஅழுவதா! இத்தகைய போக்குக்குத் தேசீயம் என்று பெயரிட்டு இருக்கிறார்களே அதனை எண்ணி அழுவதா!!

நமக்குத் தெரியாது, எதைக்கொண்டு விஜயலட்சுமி அம்மையார், அமெரிக்க சோல்ஜர்கள் ஆபீசர்கள் ஆகியோரின் போக்குக்குப் பாராட்டினார்கள் என்று! அம்மையின் அமெரிக்கப்பயணம், அந்த அறிவையோ, அந்த அறிவுக்குக் காரணமான அனுபவத்தையோ அளித்திருக்கக் கூடும்! ஆனால் நமது நாட்டு சோல்ஜர்களுக்கு மட்டும், சொகுசு, மரியாதை, அன்பாக நடப்பது முதலிய குண விசேஷம் இல்லை என்று அம்மையார் எப்படிக் கூறலாம்! பழகினால்தானே தெரியும்! ஒரு வேளை பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்பார்களே அதுபோலாகிவிட்டதோ! இல்லை! அம்மையாரின் கண்களுக்குத் தான் இந்த நாட்டு சோல்ஜர்கள் வெறும் சோற்றுப் பட்டாளமாகத் தெரிகிறதே! அப்படி இருக்கும்போது அந்த அம்மையார் அவர்களை மதித்து, அவர்களுடைய குணவிசேஷங்களைக் கண்டறியப்பழக இசையமாட்டார்கள்! அமெரிக்க சோல்ஜர்களும் ஆபீசர்களும், இந்த இங்கிதமான மொழி கேட்டு, பூரித்திருப்பர்! இந்தியாவுக்குச் சுயராஜ்யம் கொடுத்து, அந்தச் சுயராஜ்ய சர்க்காரிலே விஜயலட்சுமி அம்மையாருக்கு விசேஷ அதிகாரம் கொடுக்கவேண்டும் என்றும் கூறுவர். "உங்கள் அன்பும்குணமும் என்நெஞ்சை நெகிழச்செய்து விட்டது! என்நாட்டிலே உள்ள சோல்ஜர்கள், வெறும் சோற்றாள்கள்! நீங்கள் சுகுமாரர்கள்" என்றுவிஜயலட்சுமி அம்மையார் கூறக்கேட்டு, அமெரிக்கசோல்ஜர்களுக்கும் ஆபீசர்களுக்கும் கூட நெஞ்சு நெகிழ்ந்திருக்குமல்லவா!! ஆனால் நமது நாட்டுப் போர்வீரர்கள் மனம் எவ்வாறு புண்படும்! அதற்குஎன்ன மருந்து?

—:(o):—

பார்வதி பி ஏ.,

4-ம் பக்கத் தொடர்ச்சி

ளவர்களுக்கு, நான், கொஞ்சம் பயற்சியளிக்கவேண்டும். அது முடிந்ததும் நமது வேலைத்திட்டம் ஆரம்பமாகும்" என்று கூறினான். "என்ன பயற்சி?" என்று பார்த்திபன் கேட்க, ஜப்பானியன், பிரமாதமாக ஒன்றுமில்லை. தண்டவாளங்களை அகற்றுவது எப்படி? ரயில்களைக் கவிழ்ப்பது எவ்விதம்? தபாலாபீசுகளை எந்த நேரத்திலே கொளுத்துவது என்பனபோன்ற சில்லறை விஷயங்கள்தான் என்று சிரித்தபடி கூறிக்கொண்டே, பார்த்திபனைக்கட்டி அணைத்துக்கொண்டு "பார்த்திபா! ரயில்கள் கவிழவேண்டும்! தபாலாபீசுகள் தீப்பிடித்து எரியவேண்டும்! கட்டிடங்கள் தூளாக வேண்டும்! இந்தக்காரியம் நடந்து கொண்டிருக்கும் நேரத்திலே, ஜப்பானியப்படை இந்தியாவிலே நுழையும்" என்று ஆனந்தமாகக் கூறினான்.

(தொடரும்.)

மறைவு

கரூர் தாலுக்கா மேலப்பாளையம் திராவிடர்கழக இயக்கத்தோழரும், ஷை கழகத்தைத்தோற்றுவித்தவருமான தோழர் க. வையாபுரி அவர்கள் தாயாரும், ஷை கழக வளர்ச்சிக்கு ஆதரவளித்தவருமான, திருமதி முத்தம்மாள் அவர்கள் 9-2-45 வெள்ளிக்கிழமை இரவு 9-மணிக்குஇயற்கையெய்தியதுகேட்டுத்திடுக்கிட்டுவருந்துவதுடன், அவ்வம்மையாரைப் பிரிந்து வாட்டமுறும் குடும்பத்தார்களுக்கு, இத்திராவிடர்கழகத்தின் சார்பாக எங்கள் மனமார்ந்த ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

சத்தியமங்கலம் கஸ்பா வகுத்தம்பாளையம்மணியக்காரரும்திராவிடர்கிளர்ச்சி ஆர்வமுள்ளவரும், சீர்திருத்தமுறையில் பற்றுள்ளவருமான, தோழர்மா. கருணைகாமுதலியார் அவர்கள்தமது 51வது வயதில் 11-2-45 தேதிஇரவு 10-30 மணிக்கு தமது இல்லத்தில் இயற்கை எய்தினார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

சென்னை பச்சையப்பன் கல்லூரிதமிழ்க்கழகம்.

5—2—45 மாலை, மேற்படி கழகத்தினுதாவில், பேராசிரியர் M. கந்தசாமி முதலியார் தலைமையில் தோழர் C. N. அண்ணாதுரை, நாடும் ஏடும் எனும் பொருள்பற்றிப் பேசினார். கழகத்தார் ஒரு வாழ்த்துப்பத்திரம் அளித்தனர். ஏராளமான மாணவர்கள் கூடியிருந்தனர்.

தரங்கை வாலிபர்
முன்னேற்றக் கழகம் தரங்கபாடி

8—2—45ல் ஷை சங்கம் வித்வான் மு. அம்பலவாணப்பிள்ளை அவர்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று. தலைவர் தோழர் ரா. நாராயண செட்டியார் உபதலைவர் தோழர் சத்குரு சிங்காரவேல் நாடார், காரியதரிசி தோழர் எஸ்.குஞ்சிதபாதம், உபகாரியதரிசி கே. ராமசாமி பொக்கிஷதார் வித்வான் அம்பலவாணப்பிள்ளை ஆகியவர்கள் முறையே தேர்ந்தெடுக்கப்பட்டு நிர்வாகக்கமிட்டியும் அமைக்கப்பட்டது. சுமார் 30 அங்கத்தினர்கள் சேர்ந்திருக்கின்றனர்.

சீர்திருத்தத் திருமணமும்
பகுத்தறிவு நூல் நிலையத் திறப்பு விழாவும்

9—2—45ல் சந்நாசி நல்லூர் இளந்தமிழர் இயக்கத்தின் சார்பாக ஷை இயக்கப்பொருளாளர் தோழர் இ. பொன்னுசாமிக்கும், தோழியர் பொ.அழகம்மைக்கும், தோழர் கோ. தமிழ்முரசு அவர்கள் தலைமையில் சீர்திருத்த முறையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. மணமகனால் திராவிடநாடு, குடியரசு, இளந்தமிழர் இயக்கம் இவைகட்கு முறையே ஒரு ரூபாய் நன்கொடையாக அளிக்கப்பட்டது.

புதுவை
சந்தாதாரர்களுக்கு

பாக்கியுள்ள சந்தாதாரர்கள் தயவு செய்து தங்கள் பாக்கியை 25—2—45க்குள் செலுத்தி விடும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அப்படிச்செலுத்தத்தவறினால்பத்திரிகைநிறுத்தப்படும்என்பதையும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

L. துரைராஜ்,
ஏஜண்டு.

திராவிடர் கழகம் மதுக்கூர்

4-1-45ல் வாடியக்காடு ரெ. வெங்கிடாஜலம் தலைமையில் திராவிடர் கழக அங்கத்தினர்கள் கூட்டம் கூடிற்று, சேலத்தில் சென்ற ஆண்டு கூடிய ஜஸ்டிஸ்மாநாட்டில் கட்சியின்பெயரைத்திராவிடர் கழகம் என்று மாற்றியதை ஆதரித்தும் கட்சித்தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களிடம் நம்பிக்கை இருக்கிறதுஎன்பதையும் இக்கழகம் தெரிவித்துக்கொள்ளுகிறது.

பார்ப்பனீயம் ஒழிக

பஞ்சாங்கம் வீட்டில் இருத்தல் கூடாது, பஞ்சாங்கம் பார்க்கும் வழக்கம் ஒழியவேண்டும் என்று பஞ்சாங்கமும், இந்துலா ஒழிய வேண்டும் என்று மனு நீதியும் திருவத்தூர் தமிழர் கழகத்தில் 13-1-45ல் தீயில் கொளுத்தப்பட்டன. ஊழியன் ஆ. வி. கோவிந்தராஜன் எம். ஏ. பி. எல்.

தற்காலப் பிரச்சினை

2-ம் பக்கத் தொடர்ச்சி.

டால் நமக்குஇனஉணர்ச்சி எப்படிவரும்? நாம் வருணாசிரம ஜாதிப்பிரிவுத் தன்மையிலிருந்து வெளிப்படா விட்டால் நமது இழிவு எப்படி நீங்கும்? மேலும் நாம் எல்லோரும் ஒன்று சமம்என்கின்றதான உணர்ச்சி எப்படி வரும்?

இவைகள் நடந்தால்தானே நாம் உலகில் ஒரு மதிக்கத்தகுந்த சமுதாயமாகவும், நம்முடைய அரசியலை நாமே கற்பித்துக் கொள்ளுபவர்களாகவும் ஆக முடியும்!

இன்று திராவிடர்கள் பலர் காங்கிரஸில்இருந்துகொண்டு தங்களுடைய நாடு இந்தியா என்றும், தங்கள் சமுதாயம் இந்து (மத) சமுதாயம் என்றும் சொல்லிக்கொண்டு, தங்களை உயர்ந்த ஜாதியாகவும், அதாவது வேறுபட்டவர்கள் போலவேகருதி வருகிறார்கள். தாங்கள் இந்தியாராகவும் இந்துவாகவும் இருப்பதால், மற்றநாட்டாரால்ஆதிக்கம்செலுத்திச்சுரண்டப்படுபவராகவும், கீழ்ஜாதியார (சூத்திர)ராக இருப்பதைச்சிறிதும் இலட்செய்யாதவர்களாகவும் இருக்கிறார்கள். இனப்போராட்டமான இக்காலத்திலும் தங்கள் சுயநலத்திற்கும், பதவிக்கும் பயனனுபவிப்பதற்குமாகவே திராவிடர்களில் வெகுபேர் தாங்கள் அடையும்இழிவைக்கவனியாமல் இந்தியன் இந்து என்றுசொல்லிக்கொண்டு, "பாரதமாதாவுக்கு ஜே!" என்கிறார்கள். எவ்வளவு நாணயம், ஒழுக்கம் கெட்டவர்களானாலும் அவர்கள் வடநாட்டார்களாய் இருந்தால் (திராவிட நாட்டார் அல்லாதவர்களாய் இருந்தால்) அவர்களைக் கடவுளர்களாகவும், மகான்களாகவும், ரிஷிகளாகவும், தலைவி தலைவர்களாகவும்வழிகாட்டிகளாகவும் கருதுகிறார்கள். மற்றும் சிலரில் இப்படிப்பட்டவர்கள்எவ்வளவுதான் அறிவுள்ளவர்களானாலும் ஜாதிவகுப்புப் பேதத்தைவிடுவதென்றாலோ, ஜாதிஉயர்வைக்கைவிடுவதென்றாலோ நடுங்குகிறார்கள். திராவிடர்களில் மற்றும் பலர் தங்கள் இனத்தைப்பற்றியும்இழிவைப்பற்றியும் கவலையில்லாமல் மதம் என்பதன் பேரால் தங்களை எவ்வளவுவேண்டுமானாலும் தாழ்த்திக்கொண்டு அடியேன், நாயேன், தாசன், அடிமைஎன்று சொல்லிக்கொண்டு தங்களை இழிவுபடுத்திச் சுரண்டுகிற சாஸ்திரம், புராணம், கடவுள், உற்சவம், பண்டிகை, கருமம்முதலியவைகளுக்கு அடிமைப்பட்டுக்கிடக்கிறார்கள். இவர்களுக்கு அரசியல் இவர்கள் மதத்தைப்பற்றியதாகத்தான் இருக்கமுடியுமே ஒழிய, இவர்கள் நாட்டையோ இனத்தையோபற்றியதாக எப்படிஇருக்கமுடியும்?

ஆதலால் நாம் இன்று அரசியலைமறந்துவிடவேண்டும். ஏனென்னில் அரசியல் காரணமாக அநாவசியமாய் நமக்குள் பிளவுகள்உண்டாகின்றன. நாம் சமுதாயத்தில் "மேல்" ஜாதியாரால் அனுபவிக்கும் இழிவையும் கீழ்மையையும்விடப் பயனற்ற அரசியலைப் பிரமாதமாய்க்கருதவும், அதற்குஆக நமக்குள் போட்டிஏற்பட்டு, பகைமை உண்டாக்கிக்கொண்டு, ஒரு கூட்டம் பிறவிஎதிரிகளாகிய மஞ்சள் ஆரியருக்குஅடிமையாகிப்பதவிபெறவும். மற்றொருகூட்டம் அவர்களோடு பதவியில் போட்டிபோட வியாபார வெள்ளை ஆரியருக்குஅடிமையாகிப்பதவி பெறவும் முயற்சிக்கவேண்டியதாக ஆகிவிடுகிறது. சமுதாயத்துறையில் அரசியலைமறந்து ஆரியரோடு போர்தொடுத்தால் சமுதாயஇழிவு தானாகநீங்கிவிடும். பொருளாதாரத்துறையில் அரசியலைமறந்து வடநாட்டாரோடு போர்தொடுத்தால் சுரண்டல் நீங்கிவிடும். இந்தஇரண்டும் நீங்கினால் வெள்ளை ஆரியன் ஆதரிப்பார் அற்றுஓடிவிடுவான்.

இந்த நாட்டிலுள்ள பார்ப்பனர், ஆரியரும் திராவிடரும்கலந்த பிறவியாகும். ஆனாலும் கொள்கையில், நடையில் ஆரியர்களே ஆவார்கள் எதுபோல் என்றால் நம் ஆங்கிலோ—திராவிடர்களைப்போல் அவர்கள் ஆரிய—திராவிடர்கள் ஆவார்கள். எப்படி ஆங்கிலோ—திராவிடர்கள் திராவிடத்தாய்வழியில் வந்தவர்களானாலும் அவர்களது கொள்கை சமயம நடைமுறை ஆங்கிலேயர்களுடையதாய் இருக்கின்றனவோ அதுபோல், இந்நாட்டுப் பார்ப்பனர்கள் திராவிடத்தாய் வழியில் வந்தவர்களானாலும் அவர்களது கொள்கை சமயம், நடைமுறை ஆரியர்களுடையதேயாகும். அவர்களும், அதாவது, தங்கள் நலனுக்கு ஆங்கிலேயரை நம்பியிருப்பதைப்போல், ஆரிய திராவிடர்களும் தங்கள் நலனுக்குஆரியர்களை நம்பி, இவர்களும் ஆரிய வெற்றிக்கு உழைக்கிறார்கள். அன்றியும் பிரிட்டிஷாரும், ஜர்மானியரும் ஆரியர்கள் என்றிருப்பதால் இந்த ஆரிய திராவிடர்கள் சமயம்வரும்போது நாம் வெற்றி அடைவதைவிடப் பிரிட்டனோ, ஜர்மனியோ வெற்றி அடைவதைத்தான் விரும்புவார்கள். இவைகளைப் பார்க்கின்றபோது இன்று நாம் நம்மைப்பலமும், ஒற்றுமையும், கட்டுப்பாடும், தகுதியும்உள்ள ஒரு சமுதாயமாக ஆக்கிக்கொள்ளவேண்டியதையே தற்கால முக்கியப் பிரச்சினையாகக்கொள்ளவேண்டும். அதில்லாமல் அரசியலை முக்கியப் பிரச்சினையாகக் கொண்டோமேயானால் ஒருநாளும்இந்து (ஆரிய) மதமொழிந்த-அதாவது-வருணாசிரமமும், ஜாதிபேதமும், பிறப்புத் தொழில்முறையும் அற்ற அரசியல்உரிமை நமக்குவரும் என்று கனவுகூடக்காண முடியாது. ஆங்கிலேயருக்கும், இந்துமதமும், ஜாதிபேதமும், பிறப்புத்தொழில் முறையும், இந்து-முஸ்லீம் மதச்சண்டையும்இருந்தால்தான் தங்கள் ஆட்சியும் சுரண்டலும் நடக்குமேயொழிய, இல்லாவிட்டால்நடக்காது என்பது நன்றாய்த் தெரிந்து, அதன்மூலம் நல்ல பலன் அடைந்துவருகிறார்கள். ஆதலால்இரண்டு ஆரியர்கள் தங்களுக்குள் ராஜியாவதன் மூலம்பெறும் சுதந்திரம் நமக்குப் பலனளிக்காது.

* இக்கட்டுரை, "பிரசண்ட விகடன்" பொங்கல் மலரில் உளளது. மேற்படி மலரில் இதுபோன்ற வேறு ஆராய்ச்சிக் கட்டுரைகளும், அழகிய கவிதைகளும் உள்ளன. சுமார் 150 பக்கங்கள் கொண்ட இப்பொங்கல்மலர் ஒருரூபாய்தான்.

—:(o):—

பிரபல தமிழ்த் திருமணம்

2—2—45 காலை சென்னைத்திருவொற்றியூர் நகரத்தார் சத்திரத்தில் முன்னாள் அமைச்சர்தோழர் S. இராமநாதன் அவர்கள் தலைமையில் செல்வன் ஞானசம்பந்தனுக்கும் செல்வி சுசீலாபாய்க்கும் தமிழ்த் திருமணம் சிறப்புடன் நடைபெற்றது.

திருமணத்திற்குத் தமிழ்நாட்டின் பற்பல விடங்களிலிருந்து நம்இயக்கப் பெரியார்களும், உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும், வந்திருந்தனர். திருமணத்தைப்பற்றி டாக்டர் சுப்பராயன், டாக்டர் தருமாம்பாள், தாமரைக்கண்ணியம்மையார் A. K. தங்கவேலர் C. N. அண்ணாத்துரை T. சண்முகம் ஆகிய தோழர்கள் அரிய விரிவுரை யாற்றினர்.

மாலை தோழர் குருசாமி புதல்வி ...ரஷ்யாவின் நடனஅரங்கும், சிதம்பரம் ஜெயராம் இன்னிசை விருந்தும் நடத்தி எல்லோரையும் மகிழ்வித்தனர்.

மணமக்களுக்கும் பல வாழ்த்துத்தாள்கள் வாசித்தளிக்கப்பட்டன.

இத்திருமணத்தின் அறிகுறியாகத்திராவிடநாடு இதழுக்கு ரூ. 50-0-0, வேளாளர்சங்கத்துக்கு ரூ. 50-0-() நன்கொடை வழங்கப்பட்டது.

வட ஆற்காடு ஜில்லா

ஜஸ்டிஸ்கட்சி நிர்வாகக் கமிட்டிகூட்டம்.

4—3—45 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்குத்திருப்பத்தூர் முனிசிபல்ஐஸ்கூலில் ஜில்லா ஜஸ்டிஸ் கட்சியின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் கூடிக் கட்சியின் அபிவிருத்தியைக்கருதி ஆலோசிக்கப்படும். நமது ஜில்லாவிலுள்ள கமிட்டி மெம்பர்கள் எல்லோரும் இதுவே அழைப்பாகக் கருதிவர வேண்டுகிறேன்.

திருப்பத்தூர், 11—2—45.

இங்ஙனம்,
ஜி. சாமி நாயுடு,
B. A., B. L.,
தலைவர்,

மதுரை
அமெரிக்கன் கல்லூரி.

மதுரை, அமெரிக்கன்கல்லூரித்தமிழ்க் கழகத்தின் ஆண்டுநிறைவுவிழா, நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் சிறப்புற 9—2—45 மாலை நடைபெற்றது. கல்லூரிமண்டபம்நிறைய மாணவ மாணவிகளும், ஆசிரியர், ஊர்ப்பிரமுகர்களும், குழுமியிருந்தனர். கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் தோழர் கார்மேகக் கோனார் அவர்கள் வரவேற்புரைநிகழ்த்தினார். நாவலர் பாரதியாரின் நன்மொழிகளுக்குப் பிறகு. தோழர் C. N, அண்ணாத்துரை, "நாடும் ஏடும்" எனும் பொருள்பற்றிப் பேசினார். "இலக்கிய இன்பம்" எனும் பொருள்பற்றித்தோழர் T. சீனுவாச ஐயங்கார்பேசினார். பாரதியாரின் முடிவுரைக்குப் பிறகு, இசை விருந்தும், கழகஅமைச்சர் தோழர் சத்யேந்திரன் அவர்களின் நன்றிகூறலும் நடைபெற்று விழா இனிதுமுடிந்தது.

உதவிநிதிக்காக.

"சென்னை இராயபுரம் இரண்டாவது வட்டத் திராவிடர் கழக நிதி சேமிப்பிற்காகச்சென்னை கோகலே மண்டபத்தில் நடனக்கச்சேரியும், இன்னிசைக் கச்சேரியும் நடத்தப்படும். காலமும் இதரவிபரங்களும் அடுத்த இதழில் அறிவிக்கப்படும்."

கழகத்தலைவர்.

வரப்பெற்றோம்

கல்லிடைக்குறிச்சி முஸ்லீம்நேர்வழிச் சங்கத்தாரிடமிருந்தும், திருச்சி ஆர்ட்டையமண்ட் கம்பெனியாரிடமிருந்தும், 1945-ம் வருடத்திய காலண்டர்கள்வரப்பெற்றோம்.

திண்டிவனம்.

4—2—45 காலையில் திண்டிவனம், திராவிடர் கழக ஆண்டுவிழா வைபவம் நடைபெற்றது. பெரியார் சொற்பொழிவாற்றினார். மாலையில் தோழர்கோபாலர் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில், தோழர்கள் இ. வி. கே. சம்பத், பெரிய சாமிப்புலவர், அண்ணாதுரை, பெரியார் ஆகியோர், திராவிடர்கிளர்ச்சிபற்றிவிளக்கிப்பேசினார்.

திராவிடர் கழகம்.
(கரூர்) மேலப்பாளையம்

26—1—45ல் ஷை கழகத்தின் பொதுக்கூட்டம்தோழர் கே. வையாபுரிஅவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் கே. வையாபுரி அவர்களால்இதுவரை சர். ஏ.டி. பன்னீர் செல்வம் பகுத்தறிவுக்கழகம் என்றகழகத்தைத் திராவிடகழகமாக மாற்றுவதற்குத் தீர்மானமும் கிராமத்தின் சுகாதார வசதியைப் பொருக்க,மற்றொருதீர்மானமும்கொண்டுவரப்பட்டு எல்லோராலும் ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

கோவிந்தன்பாளையம்

14-1-45ல்இவ்வூரில் வே. மாணிக்கம் தலைமையில் நடந்த கூட்டத்தின்போது திராவிடர் கழகம் நிறுவப்பட்டுக்கழக அலுவலரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சுவாமிமலை

14—1—45ல் இவ்வூர் இளைஞர் இலவசவாசகசாலையின் ஆதரவில் தோழர் ச. சின்னையா தலைமையில் நடந்த கூட்டத்தின்போது திராவிடர் கழகம் ஏற்படுத்தப்பட்டுக் கழகக் குழுவினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஜெயராம்
காயசுத்தி லேகியம்
இரண்டே வேளையில் குணம்.

இரைப்பை, குடல்சம்மந்தமாய் ஏற்படக்கூடிய மண்டைக்குத்தல், மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி, முதுகுவலி, திராத வயிற்றுவலி, இடுப்புவலி, வயிற்றுப்பிசம், புளித்தேப்பம், அஜீரணம், மூலஉபாதை முதலியவைகளை நீக்கி, மலத்தைச் சுமாய்ப்பிரித்து இரத்தசுத்தி அளிக்கும். ஆண், பெண், குழந்தைகள் யாவரும்சாப்பிடலாம். பத்தியமில்லை. 1 மண்டலம் 4-0-0 ¼ மண்டலம் 1-4-0 வி.பி. வேறு

ஜெயராம் வைத்தியசாலை,
மகாமகக்குளம் தென்கரை
கும்பகோணம்.

தந்தி:—"புறுமார்க்" திருச்சி.

கைதேர்ந்த ஆட்களைக்கொண்டு தயாரிக்கும்

கிளி மார்க் பட்டணம் பொடி.

தென்னிந்தியா எங்கும் புகழ்பெற்றது. காரம், மணம், நிறம், வாடை கமழும், எமது கிளிமார்க் பட்டணம் பொடியை உபயோகியுங்கள்!
ஒருமுறை உபயோகித்தால் என்றும் நீங்காது ஞாபகம்.

விலை விபரம்:— நீ-1. பவுன்கலர் வீசை 1-க்கு ரூ. 10—0—0.
நீ-1. கருப்புநிறம் வீசை 1-க்கு ரூ. 9—0—0.

ஏஜண்டு இல்லா ஊர்களில் ஏஜண்டு தேவை.

ஏ. எஸ். ராஜன் கம்பெனி,
பழையவண்ணாரப்பேட்டை சென்னை.

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 317—319 Hodgsonpet Conjeeveram.